பூக்காடு

கவிஞர் ஆனந்தம்

குலோத்துங்கன்
புதிப்பகம்

சென்னை–2.

பதிப்புரிமை]

[விலை ரூ. 5/

முதற் பதிப்பு 1966.

இரண்டாம் பதிப்பு 1972.

காணிக்கை

சான்றோ னெனைத் தந்து வாக்கிய
ஆன்றவிந் தடங்கிய அன்பின் திருஉருத
தந்தையார் சுந்தர மூர்த்திக்கு நன்றியாய்
இந்தநூல் உரிமை செய்து இயற்றி ஈந்தனனே

இயற்றியவர் :

சீனி சோமு, முத்து

அச்சிட்டோர் :

தாயகம் அச்சகம்,

சென்னை-2.

பதிப்புரை

உங்கள் "குலோத்துங்கன் பதிப்பகம்" தனது முதல் வெளியீட்டின் இரண்டாம் பதிப்பாகக் கவிஞர் ஆனந்தம் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் இயற்றிய முப்பத்து மூன்று கவிதைகளைத் தொகுத்துச் சிறப்பான ஒரு நூலாக்கி உங்களுக்கு வழங்கி, நீங்கள் களிப்பதன் வாயிலாகப் பெருமை பெறுகின்றது.

தமிழறிந்தார் அனைவரும் படித்துப் பயன் அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு இந்த நூலை அளிக்கின்றோம். இப்புத்தகத்திலுள்ள கவிதை ஒவ்வொன்றும் சமுதாயச் சிக்கல்களில் ஏதேனும் ஒன்றை உள்ளடக்கியிருப்பதை உணர்வீர்கள். இத்தகு கவிதைகளை மேன் மேலும் இயற்றி ஒரு புது நெறியைக் காட்ட எண்ணிடும் கவிஞருக்கு உங்கள் மேலான ஆதரவை அளித்து ஊக்குமாறு வேண்டுகிறோம்,

விழா நிகழ்ச்சிகளில் பரிசுப் பொருளாக வழங்கிடவும், படிப்பகங்களில் பயன்படுத்தவும் ஏற்றவண்ணம் எழிலோடு இதனை அமைத்துள்ளோம்.

இந்நூல் வெளிவர ஒத்துழைத்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்வதுடன் தங்களது அருள் நிறைந்த வரவேற்புக்காகவும் முன் கூட்டியே நன்றி தெரிவிக்கின்றோம்.

வாழ்க தமிழ் !

குலோத்துங்கன் பதிப்பகம்

சென்னை-2.

என்னுரை

பேரறிஞர் அண்ணா அவர்களின் தூண்டுதலால் 'பூக்காடு' முதல் பதிப்பினை 1966-ம் ஆண்டில் வெளியிட்டேன். "முத்தாரம்" இதழிலும், பொங்கல் மலர்களிலும் அவ்வப்பொழுது என்னால் எழுதப் பெற்ற கவிதைகளில் சிலவற்றைத்தான் திரட்ட முடிந்தது.

தொகுத்து நூலாக்கிடப் பணித்ததோடன்றி இதன் விற்பனையிலும் அக்கறை செலுத்தினார் அண்ணா. "பூக்காடு" என்று பெயர் சூட்டி, பல்வகையிலும் ஆக்கமளித்தார் கலைஞர். முதற் பதிப்புக்கு அவர்கள் அளித்த பாராட்டு மொழிகளை இரண்டாம் பதிப்பிலும் வெளியிட்டு மகிழ்கிறேன்.

இடைக்காலத்தில் இந்த நூல் தமிழக அரசின் பரிசினையும் பெற்றுள்ளது. ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம் 1-7-71 அன்று அதற்கென ஒரு பாராட்டு விழாவும் எடுத்து, என்னைச் சிறப்பித்தது. பாராட்டியோரும் விழா நடத்தியோரும் என் அன்புக்குரியவர்களாகிறார்கள். பரிசுத்தொகையான ஆயிரம் ரூபாயை அண்ணா அறக்கட்டளை நிதியில் சேர்த்துவிட்டேன்.

ஏற்ற ஓவியங்களைத் தீட்டி உதவிய அருமை நண்பர்கள் (சினி) சோமு, முத்து ஆகியோருக்கும், அச்சியற்றி உதவிய 'தாயகம்' அச்சகத்தார்க்கும், நண்பர் நரசிம்மனுக்கும் நன்றி.

தமிழகம் இந்த இரண்டாம் பதிப்பினை விரைந்து வரவேற்கும் என்ற நம்பிக்கையுண்டு.

வணக்கம்.

அன்புள்ள
ஆனந்தம்

தமிழ்நாடு

வாய்மையே வெல்லும்

தமிழ்நாடு அரசு

நூல் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

சான்றிதழ்

1966 , 19 ஆகிய ஆண்டுகளில் வெளியான

நூல்களுள் கவிதை

என்னும் பகுதியில் தக்காடு

என்னும் நூல் முதற் பரிசுக்குரியதெனத்

தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் ஆசிரியர்

திரு கவிஞர் ஆனந்தம்

அவர்களுக்கு ரூபாய் ஆயிரம்

நடந்த விழாவில் முதற் பரிசாகிய ரூபாய் ஆயிரமும்

இச்சான்றிதழும் வழங்கப் பெறுகின்றன.

இடம் : இராசாசி மண்டபம் சென்னை

நாள் : 17. 4. 1971

நூல் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

மா மருந்து

அன்புள்ள மாதவனுக்கு

நான்

அவசரவசரமாக ஒரு பேட்டியை, அன்று வெளிவந்த எனது அன்பு நூலுடன் அனுப்பினேன்.

அதைப் படித்து அதுபற்றி என்னிடம், ஆலோசனை, அபிப்பிராயம் கேட்டாயா? அதுதான் இல்லை! அதுபற்றி அறிவிப்பாயா! — என்று அதைக் கூறினேன். ஆலோசனை, அதன் அவசியம் அனைத்தும் கூறாமல் அதைப் பெற்றுக்கொண்ட புன்னகையும், பேச்சுக்கிடையும் கூறாமல், கண்ணோடு கண்கொண்டு, அவை கூறும் செய்தியை நினைத்து அவசரமாக மடிபவர்கள், அதிகம் இருப்பர்.

சொற்களோடு நான் கொண்டிருக்கிற, அந்த நினைப்பு கூட்டுக்கொண்டு நான் கவிதை; அவர் கதையாகப் பட்டதும் கவிதை சேர்த்து கொண்டிருப்பதும் ஆய்வுரையும் சேர்த்தியும் கொண்டிருப்பதும், அம்பிகை கொண்டிருப்பதாக நான் நினைப்பதும் கொண்டிருப்பதும்; நாடகமாகக் கொண்டிருப்பதும்.

[illegible]

[illegible]

[illegible]

அறுபடாத [illegible] அயர்ந்து
பேரவாவுடன், எதிரும் இன்னல், எப்பொழுதும்
இன்னிசை பேரறிவு கண்டுகொண்டு;
இயற்கையின்! எனையே கவியுடனே
[illegible]
[illegible]
பெருந்தன்மை [illegible] இன்னியல்பு [illegible]
இன்னிசை [illegible], எப்பொழுதும்
[illegible] [illegible] [illegible],
உண்மைக்கு [illegible] கவிதை [illegible].

[illegible] [illegible] [illegible],
[illegible]
[illegible], [illegible] [illegible],
[illegible] [illegible] [illegible] [illegible],
[illegible] [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]!
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible], [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]! [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible], [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



ஒளிக்காடு

கிளைகள் அனைத்தும் எடுத்துயர்ந்த
கவலைகளின் தொடுப்பே இந்தப்
புங்கம்!

புதுமனைகள் கடமும்!
பிடித்தென்னும் நிலமும்!
கோபுரம் கூவிடும்!
கோலமயில் ஆடும்!
சிந்தனை சிறகு பரவும்!
அந்தமுடன் உன்னமெனவும் தேன்
பாயச் செய்திடும் இந்தப் புங்கம்!

அனைத்தும் கவலைகளின் - அடையாள
முடிவேட்டுக்கொண்டதும் - விடுத்துமென
கடைவேட்டுக்கொண்டதும் அறைந்து
மகிழ்ந்துவன் நான். நண்பர் அனைத்தும்
சிரிக்கும் தோழர்தம் சிரிப்பைவிட
எனியவரோ சிரிப்பைவிட எனிமையது

டையனை திருடு கிறார்கள். உங்கள்
தாய் எப்படி உருவு கொண்டாளோ
அப்படி உருவு தோன்றுவதை
திருடு கிறார்கள் என்று விரும்
கருதுகிறேன்.

வெடியின் தூயவம் - சுதேசியம்
கொடுமை - தீமையின் வன்மை -
கோட்டுன் நிலை - இவைகளை
திருடு கிறார்கள் என்றால் எனக்கு
கோபங்கொள்ள படம் பிடுக்கின்
றன. இப்படியாகிய சுதேசியத்
தின் மனைடமாக் கொடுக்கத்
தேடுகிறேன். இதனை சிந்தை வெள்ளை
வெறிவதிடு.

உயர்ந்த கோபுரம் தீவளைக்கொண்
கிறார்கள், தாயிழந்தாள். ஏன்கிறை
உயர்ந்தாள். விதவையான
அந்த கிழவியிக்கு கூடுவன்
ஆகவன் கிடைத்து விட்டான்.

திருச் செந்தூர் கோயிலை அடைந்த
சுவாமி தேவசகாயம் எப்படி
தான் மனம் சுகப்பட்டு சொன்னது
உண்மைதானா. அவரை
திரு திருச்செந்தூரான் தன் இன்பத்
தேடி, நாடி விரைவு கிடந்தேயும்
புகழ்பட்டான்.

"ஆறுமுகன் கண்டபத்தும்
பிறந்த தேவன்
உயிரன் கொடுத்தான்
திருச் செந்தூர்.

பிறந்தேன் பயனாக, விதியை வென்று
பிறவாமல் காத்துக் கொள்
உறுமிடமே!
காமக் கடல் கடந்து கரைக்
கண்டு
கருணையாய் நின்று விட்டான்
கருணையாய்

தாழ்வுற்றேன் புழுதிக் குட்டையிலே
தூயவடிவாகிய மலர்த் தூவணியர்
தீர்

இதோ! எப்படி என்னைப்
போலக் கணவனே தெய்வமாகக்
கொண்டிருக்கிறாள் இவளும்.
அடுத்து என்ன என்று கேட்க
அவள் பொறுமை இழந்துவிட்டாள்?
துக்கப்படுகிறேன் சொல்லுங்கள்.
புகழ்மேல் ஆசையுள்ள அரசர்
கொலை செய்து நாடு பிடிக்கிறார்
கொடுமையை நான் படுகிறேன்.
இருகரைகளுக்கு இடையே
வருவதே ஆற்று, இருகரை இடை
கரைகள் கொடுமை — இடையே
இக்கரைகள் கொடுமை — வெள்ளம்
கொடு மடமகிழ்ச்சி மாண்பு

அனைத்தும். கணை பயப்பதினை
ஏற்படுகின்றது? ஆம், இந்தக்
கவிதைகளைப் பயப்பதினை ஏற்
படுகிறது. கணையும் - கவிதை
ஒன்றையொன்று மோதுகின்
றனவாக நிற்பதுதானே
ஏன் என் அன்றாட வேண்டுமென்
றே? அதன் நிகழ்ச்சியை
நடத்துவோர் கவிஞர் அனைத்தும்.

"கதிர் கூட்டம் வெப்பத்தைத்
தொடுவிட் டாங்கே

கடலேகத் தீர்க்கக் கொடுக்கு வாழ்வை'
கொடுமுடி

தொடுவது போலேகூட் டுக்கு தூக்கி
தொடுவானின் மீதுமேகம்
தேகுகுழ'

என் சிவச் சிறப்பிக்கும் போது
தேக்கியில் கொழுகின்ற இன்ப
நடிப - இன்ப உணர்வை - இந்தக்
கவிதை வரிகளின் வாயிலாகவே
அனுபவிக்கிறோம்.

இன்றாகி பொருள் தேடிக்கும்
பயன்தான் என்ன
இன்றுமன் சிறவேறும்
மானம் வேண்டாம்?

என்று சிவச் சேட்கும்போது,
புலம்கள் எதிர்க்கும் இனம்
புலனை உணர்ச்சி போர் உறு
நாக்கி மகிழ்கிறோம் நாம்.

இரத்தினம்மாள் என்பவளின்
பொறுமை நெஞ்சை கண்ட கவிஞர்
சிவமது உள்ளம் பாடி எழுதிக்

கூட்டம் உலகையிலே என்ன
நயம்! என்ன நயம்!

"எவ்வளவோ சிக்கனமாய
இப்படிக்கூட

இனிக்கூறும் எப்புகழ்;
அதே பேரன்பு

'அவர்கள் ஆயிரம் இருப்பினும்
கண்ணியத்தைக் கைப்பற்றும்
வழியிலே; ஏக மேம்பட
எப்படியேனும் வேண்டும் என்ப
தைக் கவனம் கூட்டுக் கூட்டம் அடிக்கே
அடிக்கே!

"பெண்டாட்டி நோயாள்
பெரிய பெண்டு

பெற்றோரை இக்காலத்தும் மறவ
மன்மதே!

கொண்டவன் கின்றே
வகுமனைத்தீர்.

குடிமனை கண்ணி வினை வயிறு
நாய்விட்டு

நொண்டரும் நாணமையினும்
கலவெல்லாம்

நீர் கெட்ட வாழ்க்கையிலே
நிலைத்திடுவீர்,

கொண்டவர் தென் தன் மதிப்பாயக்
கொண்டிருக்கை

கொள்ளாரும் வெற்றியிலே
ஏக இறைவா

கடவுள் பரவுக வினை கனியும்
[illegible] கவிஞர் பின்வரவுக்
பயனல்! திவனையும் பரந்து
விட்டு, இந்த கவினை கூடியும்
பரந்தீர் நம்மைவிட நாம்

நல்லூரான் விடு.

"பட்டினப் பாலை இந்த அட்டை
உயர்ந்த
பனிச்சனை நீ இருக்கையிலே
பொலிவுடன் கிடப்பேன்

கிட்டாத பொருளாக நீயும், உயர்ந்த
கிளையெல்லாம் மறந்து விட்டுக்
கனிந்திருப்பேன் நான்.

புதுமனைப் புகுவிழா - பொன்னின்
சிறப்பை வருணிப்பேன். தலைவன்,
மைந்தனிடம் அவன் மனைவியைப் பற்றிச்
சொல்லி பேசுகிறான். "உன் அன்னை
புதுமனை மகிழ்ச்சியில், நேற்று
விருந்தினர் போல் கொண்டாட்டம்
விட்டு, மாட்டிடம் உறவாடி
மகிழ்வாள்" என்கிறான்.

உனை இவன் வந்து !" சேனைத்
தலைவ! இவர்தாம் பகைத்த
கொடுமையை பலமுறை சொல்லி
விண்ணிட்டார் மகாராஜன்!"
என்று பதிலுக்குச் சேனாதிபதி
சொல்ல, அதனைக் கவனித்து வருவிர்
பார்த்து நான் விழுந்து விழுந்து
சிரித்தேன். சிரிப்புக்கு இரண்டு
காரணங்கள் உண்டு. இவர்களின்
நடப்பு ஒன்று.
இவரும், சிறு கொப்பட்டும் பிரயாண
பிரியரே; அதனால் தொந்தி அறுப
வரோ என்னவோ என்னுடைய இரண்
டாவது காரணம்.
வாங்கோடா? ஒய்வு எடுக்கு
இருக்கும்பதியும், தொந்தியும்

புதுமையாகும். பொன்னு கவிஞர்
கள், நம்மை விடச் சொல்லச்
சிரிக்கவைக்கும் வகையில்
அமைந்துள்ளன.

பொய்யாகிப் போய்ப் புகழு
மென் இன்ப நாண்பர்
அனைத்தும் பொய்யாக உண்மைக்
கவிஞர்களின் வரிசையிலே
இடம்பெற்றுக் கிடக்கிறது.

இதுவரை இருந்துவரை
யாரை நாம்பாராட்டுகிறோம்
பெருமை அடைகிறோம் என்று
அறிந்து அறிந்து பொய்களை
புகழ்ந்து விட்டபிறகு, நாம்
என்ன செய்ய இருக்கிறது

தேன் நாவலரும் பாவும்!

'ஆக்கம்'

புலர்ச்சியைத் தேடுகிறது!

புலவர் பேரூரும்

திருப்பதம்!

நாவ பேரூரும்

திருவிளையாடல்!

உண்மைக் கடல் உதித்த

திருவிடத்தே புகுந்தது!

அன்பன்

ச. அ. முத்து

கட்டாத முத்தாரம்

33 தலைப்புகளில் 213 எண்சீர் விருத்தக் கவிதைகளைக் கொண்ட இந்நூலுக்கு ஆசிரியர் ஏன் **பூக்காடு** என்ற பெயர் இட்டிருக்கிறார் என்று எளியேனுக்குப் புரியவில்லை. பூக்கள் அல்லது பூம்பொழில் என்ற பெயரே போதுமே. ஆனந்தம் கவிதைகளின் தனிச் சிறப்புகள் சில. அவற்றுள் தலையாயது கவிதைகள் யாவும் ***சிறுகதைச் செய்யுள்களாகவே*** அமைந்துள்ள சிறப்பேயாகும். கதை தழுவிய கவிதைகள் கருத்தைக் கவ்வ வல்லன. இவ்வுண்மைக்கு இத்தொகுப்பே சிறந்த சான்று.

அடுத்த பெருஞ்சிறப்பாகக் கருதத்தக்கது, விடுதலை இயக்கம் விறு பெற்றிருந்த காலத்தில் பிறந்த கவிதைகளே ஆயினும் இந்திய விடுதலை இயக்கத்தின் நேரடித் தாக்குதல் எதுவுமே அற்றதாய், அவ்வியக்கத்தின் உள்ளார்ந்த குறிக்கோளும் தொலைவுப் பயனுமே ஆகிய சமூகச் சீர்திருத்தத்தின் எழுச்சியே நிறைந்துள்ளமையாகும்.

இந்த வகையில் கவிஞர் ஆனந்தம் அவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைப் பொய்கையில் பூத்த புத்தெழில் மலர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த சீர்திருத்தச் செம்மலர் என்றே செப்பலாம்.....

பரிசு பெற்ற இவருடைய கவிதை நூலுள் ஒரு கவிதைக்கு மட்டுமே என்னை முதற்பரிசு கொடுக்கும்படிக் கேட்டால் (என்னை யாரும் கேட்க மாட்டார்கள் !) இந்த நூலுள் இரண்டாவது கவிதையாக இடம் பெற்றுள்ள ‘ கட்டாத முத்தாரத் ’தையே காட்டுவேன். இக்கவிதை மிகமிகச் சிறந்த கவிதை. ஆசிரியரின் ஆளுமையை அப்படியே உரித்துக் கொண்டு பிறந்திருக்கும் கவிதைக் குழந்தை இது. ‘ ***கட்டாத முத்தாரம்*** ’ என்ற இக் கவிதையின் தலைப்பே இந்நூலுக்கும் தலைப்பாக அமைந்து இருந்தால் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து.

டாக்டர் ந. சஞ்சீவி

“ தமிழ் உறவு ” 15—7—72

வேர்ப்பலாவின் சுவை

பூக்காடு தந்தவரே ! கவிதைக் காகப்
புதுப்பரிசு பெற்றவரே ! சமுதா யத்தை

நோக்காட்டில் தள்ளுகின்ற பழமை தன்னை
நொறுக்கிவரும் தஞ்சாவூர்க் கவியே ! இங்கே

நீர்க்குடங்கள் நடுவினிலே வைக்கப் பெற்ற
நெய்க்குடத்தைப் போன்றவரே ! உம்மை நாங்கள்

*வேர்ப்பலாவின் சுவை*யென்று கருது கின்றோம் !
மேலான தமிழில்பா ராட்டு கின்றோம் !

பகுதியெலாம் சொற்களுக்குத் தலைமை தாங்கும்
பழங்களெலாம் விதைகளுக்குத் தலைமை தாங்கும்

தகுதியெலாம் திறமைக்குத் தலைமை தாங்கும்
தந்தங்கள் பற்களுக்குத் தலைமை தாங்கும்

மிகுதியெலாம் நீரானால், கடலாய்த் தோன்றும்
மிச்சமெலாம் அறிவானால், புகழாய்த் தோன்றும்

விகுதியென நிற்காமல் பகுதி போன்று
விளங்குகின்றீர் ; ஆதலினால் போற்று கின்றோம்.

— உவமைக் கவிஞர் சுரதா.

இயல் 1

ஆனந்தம்

கவிதைகள்

உள்ளே...

- அவளும் நானும்.
- கட்டாத முத்தாரம்.
- திருமணம் வேண்டாம்!
- பாகப்பிரிவினை.
- புதுப்பாதை.
- தாயும் மகளும்.
- பிழை-திருத்தம்.
- சாவும் வாழ்வும்.
- எல்லாம் அவன் செயல்!
- சிந்திய தேன்.
- கண்ணைத் திறந்து விட்டாய்!
- முள்ளை முள்ளால்!....
- நாணம் தவிர்த்த செல்வன்.
- சிவனடியார்.
- தியாகத் திருமணம்.
- தந்தையும் மகளும்.
- இரவும் பகலும்.

காலையிலே கண்விழித்துப் பார்த்த போது
காணவில்லை; 'அவள்' பகைவன் கதிரோன் வந்தான்!
'வேலையில்லா வீணனிவன்' என்று சொல்லி
மெதுவாக மனத்தினுள்ளே வைது கொண்டேன்!
சோலையிலே இணைந்திட்ட அன்றில் போலச்
சுகங்கண்டேன் இதுகாறும்; சோம்பல் தீர்ந்தேன்!
ஆலையிடைக் கரும்பாக அவதி யுற்றே
அரும்பாடு படவேண்டும் பகலில் எல்லாம்!

அந்தியினை வரவேற்றேன் ஆர்வத் தோடும்;
அயர்ந்தவுடல், தளர்ந்தமனம் திமிரு மன்றோ?
விந்தையெழில் காட்டுகின்ற வான மிதில்
வெண்மதியுந் தண்ணிலவை வீச வந்தான்!
சிந்தையிலே தீயெண்ணம் சேர்த்த வர்க்கும்,
திருடருக்கும், காமுகர்க்கும் சிரமந் தீர்த்து
நொந்தமனக் காதலர்க்கும் துணையாய் நிற்க
நூதனப்பெண் இரவென்னும் பாங்கி வந்தாள்!

அள்ளியொரு கவளத்தை விழுங்கி விட்டே
'அவள்' வருகை எதிர்நோக்கிப் படுத்திருந்தேன்.
கள்வனைப்போல் வருவாள் என் காதல் தோழி—
கண்பொத்தி அன்புமுத்தம் தருவாள்; இன்பம்
வெள்ளமெனப் பொங்கியெழும் உள்ள மெங்கும்;
வேதனைகள் மாய்ந்தொழியும், உடலின் சோர்வு
துள்ளியெழுந் தோடிவரும்; தூய நெஞ்சில்
தோன்றுத காட்சியில்லை; துன்பம் வெல்வேன்!

மறக்கவொணா இன்பமழை பொழியும் அந்த
மாயமுகில் மங்கை 'அவள்' வடிவ மில்லாள்!
துறக்கவொணாப் பெருநோயால் தொடரப் பட்டோர்,
தொழிலாளர், உழைப்பாளர் துயரம் போக்கச்
சிறக்கவொரு மருந்தாவாள்; செல்வர் தம்மைச்
சேராது நீங்கிநிற்கும் சீர்மி குந்தாள்!
உறக்கமெனும் பெயருடையாள்! உலகம் வாழ
உதவிடுவாள்! 'அவள்' என்றும் ஓங்கி வாழ்க!

கட்டாக முத்தாரம்

மூச்சடக்கிக் கடலடியில் மூழ்கிப் பாய்ந்து,
முத்திருக்கும் சிப்பிகளை மேலே சேர்த்து,
நீச்சலுக்குத் துணிச்சலில்லா நெஞ்சத் தாலே
நிறைமணலின் கரைமீதே நின்ற வாறு
வாய்ச்சரக்கின் வலிமையினால் பொருள்கு விக்கும்
வணிகருக்குத் தரநேரும் வாழ்வை எண்ணிப்
பேச்சடக்கிப் பெருமூச்சைத் துணையாய்க் கொண்ட
பெரியண்ணன் தளர்நடையில் வீடு மீண்டான்.

அத்தானின் வருகைக்குக் காத்து நின்று
அழகம்மை கலயத்தில் கஞ்சி வார்த்துச்
சத்தான விருந்தைஅவன் அருந்தும் போது
தயக்கமுடன் குரல்வளையில் சுருதி கூட்டிச்
"செத்தாலும் தீராத ஆவல் ஒன்று
சிந்தையிலே குடியேறி விட்ட தத்தான்!
முத்தாரம் பூணுவது முடியா தா? நான்
முத்தெடுப்போர் மனையாட்டி தானே!" என்றாள்.

''பட்டான பவளஇதழ் ஒட்டா வண்ணம்
பளிச்சென நீ சிரிக்கையிலே வெளிச்சங் காட்டும்
கட்டாத முத்தாரங் கண்டும், உண்டும்
கவலையெலாம் மறந்துவிட்டுக் களிக்கின் றேன்நான்
கிட்டாத வலம்புரியின் சங்கு போன்ற
கிளிக்கழுத்தில் முத்துநகை எதற்குக் கண்ணே
எட்டாத கொம்புத்தேன் வேண்டாம்'' என்றான்—
இருவிழியில் முத்துமுத்தாய் நீர்சு ரக்க!

''ஐயயோ, பிடிவாதம் செய்ய மாட்டேன்!
அதற்காகக் கலங்காதீர் அன்பே! ஆனால்,
தையலுக்குப் பொன்னுரைகள் சொன்ன நீங்கள்
தங்களது கண்களினால் முத்து மாரி
பெய்வதுதான் முறையாமோ?'' என்று கிண்டல்
பேசியொரு முத்துநகை புரிந்தாள்! கண்டு
மெய்சிலிர்த்த பெரியண்ணன் முத்தம் பற்றி
வெறும் பேச்சுக் கிடங்கொடுக்க வில்லை, மேலும்!

திருமணம் வேண்டாம்

முதன்மனைவி சுந்தரியைக் கையில் தந்து,
முடித்துவிட்டார் தன்வாழ்வை, முன்றே ஆண்டில்!
அதன்பிறகு சுப்பையா இளையராஜாக
அலர்மேலைக் கைப்பிடித்தார்; சமையலுக்கும்,
இதந்தெரியாச் சிறுமிதனை வளர்ப்பதற்கும்
ஏதுவாக இருப்பாளென் றெண்ணி னாரம்!
இதன்விளைவை அப்பொழுதே அறிந்திருந்தால்
எப்போதும் இப்பிழையைச் செய்ய மாட்டார்!

வந்தவளும் சிலகாலம் வழக்கம்போல
வாஞ்சையுடன் நடந்துகொண்டாள்! ஆண்டுக் கொன்றாய்ச்
சொந்தமுடன் குலவுதற்குக் குழந்தை பெற்றுச்
சுப்பையா குடும்பத்தை வளர்த்த பின்னர்...
சுந்தரிக்குச் சொல்லவொண்ணாத் தொல்லை தந்தாள்!
துயரத்தை மனத்திற்குள் மறைத்துக் கொண்டே,
தத்தைபடுஞ் சங்கடத்தை எண்ணி நைவாள்;
தலையணைதான் கண்ணீரில் ஊறிப் போகும்!

மாற்றுந்தாய்க் கொடுமையெனில் இன்ன தென்று
மற்றவர்க்குக் காட்டவந்த அவதா ரம்போல்

தூற்றுதார் இல்லையென்ற புகழைத் தாங்கித்
துன்பத்தைத் தொடர்கதையாய் ஆக்கிப், பிள்ளைப்

பெற்றாலே உடல்நலிந்தாள் உயிர்து றந்தாள்!
பேதையிவள் தலைமீதே சுமையும் வீழ,

ஆற்றாத கவலைகளை அடக்கிக் கொண்டே,
அப்பாவைக் குழந்தைகளைப் பேணி வந்தாள்.

மணம்புரிந்து மகிழ்வடையும் பருவ மங்கை
வருகின்ற வரனையெலாம் மறுத்தல் கண்டு,

மனம்தெரிந்து வகைதேட இயலாத் தந்தை
மகள்முன்னே மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்க,

"மணம்புரிந்து நான்சென்றால் மீண்டும் இந்த
மதலைகளைத் தவிக்கவிட்டு மணம்வி ரும்பும்

குணம்தெரிந்து கூறுகின்றேன்" என்றாள், அப்பா
கோடிமுறை இல்லையென்றார்; சம்ம தித்தாள்!

காவிரியின் படுகையிலே மூன்று வேலி ;
கட்டுக்கோப் பானவொரு மாடி வீடு ;
மா, விறகுக் காகின்ற கருவேல், தென்னை,
வாழை, புளி மரங்களுடன் பெரிய தோட்டம் ;
பூவிருக்கும் காய்கனிகள் காய்த்தி ருக்கும்
புறக்கடையில் கொல்லையிலே பசுமை கொஞ்சும்
ஆவினமும் காளைகளும் அடங்கும் கொட்டில் ;
ஆடு, கோழி, வைக்கோற்போர் யாவு முண்டாம் !

இத்தனையும் தேடியபின் செல்லப் பர்தாம்
இறக்கின்ற தறுவாயில் மகனி டத்தில்,
"செத்தபின்னர் எனக்கெந்தச் சடங்கும் வேண்டா ;
சிக்கனமாய் வாழ்வதுதான் சீர்தி ருத்தம் !
பத்துவய தாகிறவுன் தம்பி நன்றாய்ப்
படித்திடுவான் ; பிரியமுடன் பார்த்துக் கொள்க !
சொத்துகளைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு
சுகமாக வாழ்ந்திடுவீர் !" என்று சொன்னார்.

சம்மதம்போல் மூத்தவனும் தலையை ஆட்டிச்
சாய்ந்திருந்த முதியவரைப் படுக்க வைக்க...
திம்மதியாய் வாழ்நாளை முடித்துக் கொண்டார் !
நிலையாமை உலகத்தின் இயற்கை யன்றோ ?
எம்முதலும் இல்லாமல் வணிகஞ் செய்யும்
ஏமாற்றுக் காரரையே அழைக்க வில்லை ;
விம்முதற்கும் விழிநீரைச் சிந்து தற்கும்
விருந்தினராய் வந்தவரும் திரும்பிச் சென்றார்.

அண்ணனுக்கு மனையாளாய் வாய்த்த தையல்
அருங்குணங்கள் திரண்டபெரும் உருவாய் வந்தாள் ;
உண்ணுகையில் காக்கைவந்தால் எச்சில் கையை
ஒழுங்காக தக்கிவிட்டே ஓட்டப் போவாள் !
எண்ணமெலாந் தானுந்தன் கணவர், மக்கள்
இன்பமுடன் வாழ்வதுதான் ! மாற்றுருக்குக்
கண்ணொன்று போவதெனில் தனதி ரண்டு
கண்களையுந் தாஇசையுந் தியாக உள்ளம் !

ஒருநாள்தன் கணவனுடன் உறங்கு முன்னர் ;
"உங்களது தம்பிக்குப் படிப்பெ தற்காம் ?
வருநாளில் வேலையொன்றுந் தேட வேண்டாம் !
வயல்வரப்பை வாய்க்காலைச் சுற்றி வந்து,
தெருநாய்கள் பள்ளிக்குச் செல்லுந் தங்கள்
சிறுவரையே விரட்டாமல் பார்த்துக் கொள்ள—
இருநாளைக் கொருவேளை மாடு கன்று
எங்கேனுங் குளிப்பாட்ட—வைக்கோல் போட—

இப்படியே குடும்பத்தை காத்து வந்தால்
எனக்குமிக உதவியாகும் பொறுப்பு முண்டாம்!
எப்படியும் நாம்தானே அவனுக் கெல்லாம் ?"
எனவுரைத்து வினயமுடன் சதிபு ரிந்தாள்.
அப்படியே வாழ்வுதலம் எதுவுங் காணு
அப்பாவி வாலிபனுய் வளர்ந்தான் தம்பி !
இப்படியே வழிகாட்டச் சரித்தி ரங்கள்
எவ்வளவோ நம்நாட்டில் இலையா, என்ன ?

மற்றவர்கள் ஏதேனும் சொல்வா ரென்று
மனமின்றித் தம்மிக்கு மணம்மு டிக்கப்,

பெற்றவர்க்குச் சுமையாக, எழுவ ரோடு
பிறந்தவளைப் பெண்ணாகத் தெரிந்தெ டுத்துச்

சுற்றமெலாம் அழைக்காமல் சுருக்க மாகத்
துணைநலமாய் ஆக்கிவிட்டார்! ஆனால் அப்பெண்

கற்றறிந்து, திறன்மிகுந்து, சூழ்ச்சி முற்றுங்
கண்டுகொண்டு, கணவனையுங் காக்க வல்லாள்

இருக்கின்ற நிலைமையெலாம் புரிந்தாள்; தம்பி
ஏமாளி யாக்கப்பட் டிருத்தல் பார்த்துச்

சுருக்கென்றே ஓரகத்தி நெஞ்சில் தைக்கச்
சூதுகளை எடுத்தோதி நீதி கேட்டாள்!

சிரிக்கின்ற முகம்காட்டி அண்ணி வந்து,
சிறியவனின் சீற்றத்தைச் சாந்தம் செய்ய,

உருக்கியதற் புதுநெய்யைக் கிண்ணத் தோடே
உணவருந்துந் தம்பியிடங் கவிழ்த்து விட்டாள்!

''இங்கிவரை ஏய்த்துவந்த தினிமேல் வேண்டாம்!
இன்மொழியால் சலுகைகளால் குறைகள் தீரா!

அங்கமெலாம் நோகாது வாழ நீங்கள்;
அடிமைகளா; கூலியிலா ஆளா, நாங்கள்?

தங்கத்தைப் புழுதியிலா மறைத்து வைத்தீர்?
தணலின்மேல் படமிட்டேன்; ஒளியைப் பாரீர்!

சிங்கத்தைச் சிறுநரிகள் ஆள்வ தேபோல்
சேர்ந்திருக்கும் தந்திரத்தால் அடக்கப் பார்த்தீர்.

உலகத்தில் உயிரைவிடப் பெரிதாம் மானம்;
உரிமையெனில் மானத்தின் மிகவும் மேலாம்!

பலகற்றும் விடுதலையில் லாத வாழ்வார்
பயனென்ன? இதுவரையில் சுரண்டல் போதும்!

விலகட்டும் கொடுமையெலாம் இன்றே! இந்த
வீடுமுதல் யாவையுமே இரண்டா கட்டும்!

கலகத்தைத் தவிர்த்திடுவோம், அக்கா!'' என்றான்;
கபடமினி நடவாதென் றுடன்பி ரித்தார்!

தங்கப்பன் மேகலையைக் காத லித்துத்
தாய்தந்தை பகைமையினைச் சம்பா தித்தான் ;
சிங்கப்பூர் சென்றேனும் மணந்து கொள்ளத்
திட்டமிட்டான் என்பதெலாங் கேள்விப் பட்டு
"மங்கைதனைக் கைவிட்டுப் பெற்றோர் சொல்லை
மதிப்பதுதான் முறைமையெனக் கூறிப்பார்த் தேன்
"உங்களுக்குச் சொல்வேறு, செய்கை வேறு ?
உதட்டளவா சீர்திருத்தம் ?" என்று காய்ந்தான்

முன்னின்று திருமணத்தை முடித்து வைத்து,
முயற்சியுடன் அலுவலொன்றும் தேடித் தந்தேன்.
என்னென்று சொல்வதவர் இல்ல றத்தை !
எல்லாரும் பின்பற்றும் விதத்தில் வாழ்ந்தார்.
பொன்னென்றும் கண்ணென்றும் புதைய லென்றும்
புகழுதற்குக் குழந்தையொன்றும் பெற்றுக் கொண்டார்
இன்னென்று காண்பதற்குள் எனது நண்பன்
இறப்புலகம் ஏகிவிட்டான் ; அவலம் ! அந்தோ !

எதிர்ப்பிடையே காதலனை நம்பி வந்த
இளமங்கை மேகலைதான் யாது செய்வாள் ?

மதிப்புடனே வாழ்ந்துவந்த மாமனாரோ
மருமகளைக் காண்பதற்கும் மறுத்து விட்டார் !

கொதிப்பேறும் உள்ளத்தைக் குளிர வைத்துக்
குழந்தையினை ஆளாக்கும் உறுதி யோடு,

விதிப்பயனென் றுரைப்பாரை வெல்ல எண்ணி
விசனத்தை மறைத்தபடித் தனியே வாழ்ந்தாள்.

மறைந்துவிட்ட தங்கப்பன் நினைவால் ஓர்நாள்
மனத்துயரம் மிகுந்துவர, வாழ்வில் இன்பம்

குறைந்துவிட்ட குடும்பத்தின் நிலைமை கண்டு,
குழந்தைமுகம் பார்த்துவரும் கருத்துக் கொண்டு,

நிறைந்துவிழும் பால்நுரைபோல் நிலத்தில் தோயும்
நிலவொளியில் உலவிவரும் விருப்பத் தோடு

விரைந்துசென்றேன் மேகலையின் வீடு நோக்கி ;
வெறுங்குடிசை காட்சிதரப் பின்னால் போனேன்.

தாழ்ந்திருக்கும் மரக்கிளையில் கயிற்றை மாட்டித்
தற்கொலைக்குத் தயாராகத் தங்கை நின்றாள்!

"வாழ்ந்திருக்கும் காரணத்தை மறந்தா போனாய்?
மாதாவின் கடமைதனை நிறைவேற் றாமல்,

ஆழ்ந்திருக்குந் துன்பங்கள் துச்ச மென்று
துடைப்பதற்கு வழியோது? நினது நெஞ்சில்

ஆழ்ந்திருக்கும் கருத்தென்ன? ஆரா யாமல்
அரைகுறையாய் முடிவெடுத்த தென்ன?" என்றேன்.

"தாலியற்ற இளம்பெண்கள் சமுதா யத்தில்
தனிமையிலே வாழ்வதினுங் கொடுமை யேது?

வேலியற்ற தோட்டமெனக் கருது கின்றார்,
விதவையரின் வேதனையை மதியா மூடர்!

கூலிபெற்றுக் காதலின்பந் தருவா ளென்று
குறைவாகப் பெண்மனத்தை எண்ணு கின்றார்!

கேலியுற்றுத் தவிப்பதற்குச் சாவே மேலாம்;
கேளுங்கள் அண்ணா! உம் தாளில் வீழ்வேன்!"

சிந்துகின்ற கண்ணீரைத் துடைத்துச் சொன்னேன் !
"செத்தொழிய விடமாட்டேன் தங்காய், உன்னை !

இந்தநிலை வந்ததெல்லாம் என்னால் அன்றோ?
இன்றுமுதல் என்வீட்டில் இருப்பாய் ; அம்மா

தொந்தரவு தருவார்கள் பொறுத்துக் கொள்வாய் !
சொல்லாலே சுடுவார்கள் ; சகித்து வந்தால்

நொந்திருக்கும் என்னுள்ளம் மகிழ்வு கொள்ளும்,
நோயுற்ற தாயார்க்கும் உதவி யாகும் !"

ஊராரின் தொல்லையினைத் தாங்கா மல்தான்
உடனேஎன் பின்வந்தாள் அன்பின் தங்கை ;

நேராக வீடுசென்றோம் குழந்தை யோடு !
நிமிர்த்திவிட்டோம் வாழ்வையெனுந் திருப்தி பெற்றேன்.

சீரான மேகலையும், நண்பன் தந்த
செல்வமும்என் குடும்பத்தில் சேர்ந்து கொண்டார்.

யாராலுங் குறைகாண இயலா தென்றே
எண்ணிவிட்டேன் ; தவறொன்று பிறகே கண்டேன் !

'உலைவாயை மூடினாலும் ஊரார் வாயை
ஒருநாளும் மூடுவதற் கியலா' தென்பர் ;
நிலையான வார்த்தையிது ! அயலார் வீட்டு
நிகழ்ச்சிகளைக் கவனித்துத் திரித்துத் தூற்றல்
தலையாய கடமையெனக் கொண்டோர் பல்லோர்—
தங்கைக்குப் புதுக்களங்கம் கற்பித் தார்கள் !
சிலையானேன் ; நண்பனுக்குத் துரோகம் செய்து
சிங்காரி மேகலையைக் கவர்ந்தே னும், நான் !

கேட்டவுடன் வேறெதுவுந் தோன்ற வில்லை ;
கேடுகெட்ட உலகத்தைத் துறக்க எண்ணிப்
போட்டுவிட்டேன் கயிறொன்றை விட்டத் தின்மேல் !
"போங்களண்ணா, எனைக்காத்த புத்தி எங்கே ?
ஆட்டிவைக்கும் விதமெல்லாம் ஆடு வோரை
அச்சுறுத்திப் பணியவைக்கும் உலகத் தார்க்குக்
காட்டுகின்றேன் புதுப்பாதை ! உங்க ளைஎன்
கணவரெனக் கொள்கின்றேன் !" என்றாள், வென்றாள்.

மங்களத்தின் வாழ்க்கையிலே குறைவே யில்லை ;
மனம்நிறைந்த கணவரொடும், மக்களோடும்—
சங்கடங்கள் ஏதுமின்றி அறுபதாண்டைத்
தாண்டிவிட்ட தருணத்தில்—ஒருநாள் மாலை—
எங்கிருந்தோ வந்தவொரு பாழும் நோயால்,
இதுகாறும் இணைபிரியாத் துணைவர் மாளக்
குங்குமம் பூ, மஞ்சளுடன் தாலி, மற்றும்
குதூகலமும், புன்சிரிப்பும் பறிகொடுத்தாள் !

ஆங்காங்கே அலுவலிலே அமர்ந்திருந்த
ஆண்மக்கள் ஐவரும்இச் செய்தி கேட்டுத்
தாங்காத துயரத்தால் துடித்தவர்போல்
தத்தமது மனைவிமக்கள் சுற்றம் சூழ,
நீங்காமல் உடனிருந்து கடன்கள் ஆற்றி
நியமங்கள் தவறாது முடித்து வைத்தார் !
பாங்கான உணவுண்டு நான்காம் நாளின்
பகற்பொழுதில் சீட்டாட்டம் ஆடிக் கொண்டே...

"அப்பாவோ மறைந்துவிட்டார் ; அம்மா சேர்த்த
அணிமணிகள், துணி, நகைகள் யார்க்குச் சொந்தம் ?
தப்பாமல் தமக்குத்தான் சேர வேண்டும் !
தங்கைக்குத் தரவிடுதல் தவறும் ; ஆனால்
ஒப்பாதே அவள்மனம்இத் தீர்மானத்தை ;
உதறிடுவாள் வெகுவிரைவில் !" என்று பேசி,
நைப்பாசைத் திட்டங்கள் தீட்டும் போது—
"நாலொருத்தி இருப்பதனால் தானே தொல்லை ?

கொழுகொம்பை இழந்துநிற்கும் கொடியே போலக்
கொடுமை நிலைக் காட்பட்ட அன்னை நெஞ்சம்
மெழுகாக உருகுவதை அறிந்திடாமல்
வேதனையைக் கிளறுகின்றீர் ! என்ன ஆண்கள் ?
எழுகாத தூரத்தில் இருந்தால் கூட
ஏங்குகின்ற தாயுள்ளம் மகள்தான் காண்பாள்"
தழுதழுத்த குரலிதைக் கூறிக் கொண்டே,
தாய்மார்மில் முகம்புதைத்தாள் தங்கச் செல்வி.



அப்பரவின் கைப்பரவை குப்பு சாமி—
அழகான கோமதிக்குத் தாலி கட்டித்,
தப்பாமல் முப்பதுபொன் தந்தா லன்றித்
தன்னகத்துக் கன்னவளை அழைத்துக் கொள்ள
ஒப்பாது மனமென்று மாம னுர்க்கே
உரைத்துவிட்டான், ஊர்திரும்பி ஊமை யானுன் !
எப்போதும் மற்றவரை ஏற்றி விட்டே
இருந்தஇடம் பெயராத ஏணி போன்று

ஆரம்ப ஆசிரியர் பெற்றெடுத்த
ஆரும்பெண் கோமதிதான் என்ன செய்வாள் ?
கூரம்பு நெஞ்சினிலே பாய்ந்த தைப்போல்
கொடுமைமிகு நிபந்தனையால் குமைந்து போனுள் !
"ஊர்வம்பு பேசுவதைத் தாங்க மாட்டேன் !
உயிர்சிறிது ; மானந்தான் பெரிதாம் ! என்பாள்
பேரன்பு சுரந்திடுவீர் பெருமை சேரப்
பெரியமனங் கொண்டென்னை உரிமை செய்வீர் !"

என்றெழுதிக் கண்ணீரில் ஊற வைத்த
எத்தனையோ கடிதங்கள் அனுப்பிப் பார்த்தாள் !
ஒன்றிலுமே பயனில்லை ; ஓய்ந்து போனாள் !
உடன்பிறந்தாள் துயர்கேட்ட மூத்த மங்கை—

சென்றவனைத் தன்வீட்டிற் கிட்டு வந்து
சிறியவொரு தனியறையில் இருக்கச் செய்தே,
அன்றிரவே கணவனையும் அனுப்பி, அந்த
அப்பாவி மணமகனை அழைத்து வந்து,

சிறப்பான விருந்தெல்லாம் நடத்தி வைத்துச்,
சிலநாளே கணவனுடன் அப்பாற் சென்றாள் !
முறைப்பான மாப்பிள்ளை மூன்றாம் நாளே
முரடான தந்தைக்கு முடங்கல் தீட்டி—

"அறப்பாதை தவறிநின்றேன் இதுநாள் காறும் ;
அப்பாசொல் முதன்முறையாய் மீறி, இந்தப்
பிறப்பாலே உண்டான பயனைக் கண்டேன் !
பிழைதிருந்தி வருகின்றேன் இன்றே" என்றான்.





சாவும் வாழ்வும்

"அத்தையில்லா விட்டால்நான் செத்தி ருப்பேன் ;
அப்பாவும் அம்மாவும் மறைந்த பின்னர்—
இத்தனை நாள் எனைவளர்த்தும், பாது காத்தும்,
இளமைவளந் திகழுமெழில் மங்கை யாக்கிச்
சித்தமிசை குடிகொண்ட அத்தான் உங்கள்
சிந்தனையால் உயிர்வாழும் பேதை என்னைச்
சத்தகன்ற சக்கையாக மாற்று தற்குச்
சதித்திட்டம் வகுத்திட்டார் உமது தந்தை !

கடமையினால் நிறைகின்ற காதல் வாழ்வில்
கருத்தொக்கும் நிலையிருந்தால் போதும் ; முன்பே
உடலுறவுக் குடன்படுதல் மடமை யாகும் ;
ஊரறியத் திருமணநாண் புனைய மட்டும்
திடமுடைய மனம்வேண்டும் என்ப தாலே,
தெளிவாக என்னுள்ளம் தெரிவிக் காமல்
படமுடியாத் துயரமெலாந் தாங்கிக் கொண்டு,
பார்வையினால் மனமகிழ்ந்து வந்தேன் ; ஆனால்,

குருட்டறிவைத் துணையாகக் கொண்டு விட்டீர் ;
குணத்தைவிடப் பணக்குவியல் தருமின் பத்தைப்
பொருட்டாகக் கருதிவிட்டீர் போலும் ! மேலும்,
பொல்லாங்கு சூழுமுன்னர் புறப்பட் டால்தான்
மருட்டுகின்ற உயிர்போக்க வகைகி டைக்கும் ;
வருகின்றேன், வணங்குகின்றேன், வாழ்க ! உங்கள்
இருட்டறையிற் பிணந்தழுவங் கொள்கை வாழ்க !
எதிர்காலப் புதுமனைவி வாழ்க !'' என்று

முடித்திட்ட கடிதத்தைக் கைக்குள் மூடி,
மூலையிலே அத்தானின் தனிய றைக்குள்,
துடித்திட்ட இதயத்தைப் பிடித்துக் கொண்டு,
தூக்கியெறிந் தசையாமல் திரும்பும் போதில்—
அடித்திட்ட சிலைபோன்ற அத்தான் வந்தார் !
அழகான அழைப்பிதழும் விளக்கும் தந்தார் !
படித்திட்டேன்..... மணமகள்யார் ? நானே தானா ?
படுகுழியில் விழஇருந்தேன், பிழைக்க வைத்தார்.

எல்லாம் அவன்செயல்

அவனன்றி ஓரணுவும் அசையாதென்றும்,
ஆட்டுவித்த படியாவும் ஆடுமென்றும்,
சிவனன்றி வேறிறைவன் கிடையாதென்றும்
திடமாக நம்பிவந்த தில்லையப்பர் —
தவமுனிவர் நிலைமையிலே, பற்றில்லாமல்,
'தன்செயலால் ஆவதொன்றும் இல்லை, மேலும்
அவனருளை அறிவார்யார்?' என்றெப் போதும்
அயராது கூறிவரும் வழக்கமுள்ளார்.

கரம்பிடித்த மனையாளும் காலமானாள்;
கலங்கவில்லை, கண்ணீரும் பெருக்கவில்லை;
உரம்படைத்த நெஞ்சோடும் என்றும் போலே
உருக்கமுடன் 'அவன் செயல்' என்றுரைத்து நின்றார்!
பரம்படித்து விதைதெளித்து நீரைப் பாய்ச்சிப்
பயிர்வளரும் காலத்தில் உழவன் செத்தால்—
நரம்புடைந்த யாழ்நிலைதான் ஆகுமன்றோ?
நாயகியை இழந்தவர்க்கும் அஃதே; ஆனால்,

தாயற்ற சிறுமகளோ தவிக்க லானாள் !
தாமரையின் இலைமீது தண்ணீர் என்னும்
நோயுற்ற தத்துவத்தால் வாழ்வை நோக்கி
நுடங்குகின்ற தந்தையரின் போக்கை மாற்ற
வாயற்றுத் தானாக வளர லானாள்,
வனங்களிலே கொடிமுல்லை படரு மாறு !
காயற்ற மாமரத்தைப் பேண மாட்டார்—
கனிவற்ற தந்தைதனைப் பேணி வந்தாள் !

தக்காளிப் பழம்போன்று தளத ளப்பும்
தண்ணிலவின் வெண்ணொளிபோல் குளுகு ளுப்பும்
சிக்காத சேல்போன்று துடிது டிப்பும்
சீர்பெற்ற சிற்பமென எழிலுங் கண்டு
சொக்காத ஆடவரே இல்லை அந்தச்
சுந்தரியின் தந்தையிடம் அணுகி யோர்க்கும்
"எக்காலம் ஆனாலும் என்னால் என்ன ?
எல்லாமே அவன் செயல்தான் !" என்று சொன்னார்.

"ஆண்டுகளுக் கென்ன, அவை உலகத் தாரின்
ஆசைகளுக் கடங்கிடுமா? ஒவ்வோர் நாளும்
மாண்டுவரும் இளமைதனை எண்ணி யெண்ணி
மனங்குமுறும் மனிதரது விருப்பம் போல
மீண்டுவருந் தன்மையுண்டா? காலந் தன்னே
மேலான சக்தியுடன் விளங்கும்?" என்று
கூண்டுதனில் அடைபட்ட கிள்ளை யாகக்
கொதிக்கின்ற மனத்தாளும் கருத லானாள்.

தந்தைவழி தனக்குதவுந் தகுதி யில்லை;
தளிர்பழுத்துச் சருகாகிக் கீழே வீழ்ந்தே
எந்தவழி போனாலும் யாருக் கென்ன?
இதுபோல்தன் இளமைநலம் வாடி, உள்ளம்
நொந்திருக்கும் நிலைமைதனை எடுத்துக் காட்ட
நூறுதரம் நினைத்திருப்பாள், சொல்ல மாட்டாள்!
பந்தமுள்ள சுற்றத்தார் சொன்ன போதும்
பழைமையான வேதாந்தம் படித்தார் தந்தை!

பரமசிவன் பார்வதிக்குப் பரதி தந்தும்,
பாசமுடன் கங்கைதனைத் தலையில் வைத்தும்,
தாமுடனே தாருகையின் முனிவர் பெண்டிர்
தமைவிரும்பி மகிழ்ந்திருந்தார் என்று கேட்டோம்.
சிரமமுடன் நாலுமதற்கு மணம்வெறுத்துச்
சிவனடியை நாடுவதாம்? இல்லறுத்தால்
வரமருள மறுப்பாரோ இறைவ னிரும்?
வாழ்வுநெறி அஃதேஎன் றுறுதி பூண்டாள்!

மனங்கவர்ந்த காதலனாய் ஒருவன் தேடி,
மகிழ்வோடு சிறுரறியா வண்ணங் கூடித்,
தினந்தினமும் புத்தின்பந் துய்க்க லானாள்!
திகட்டாத சுவைநுகர்ந்த ஆறுந் திங்கள்
இனந்தெரியா இன்பத்தின் உருவ யிற்றில்
எழிலோடு வளர்வதனைத் தோற்றும் காட்டச்
சினந்தெறிக்கும் விழிகளுடன் தந்தை பாய்ந்தார்
சிரிப்புடனே அருமைமகள் பேச லுற்றாள்:

"யார்செய்த வேலையென எரிய வேண்டாம் !
எல்லாமே அவன்செயல்தான் என்று நம்பும்
நீர்செய்த அலட்சியத்தின் விளைவே ஈதாம் !
நெஞ்சத்தின் அலைகளையோ அடக்க மாட்டீர் ;
ஊர்செய்த வேண்டுகோளும் மதிக்க வில்லை ;
உலகத்தின் வழக்கத்தைக் கடைப்பிடித்தேன்,
பேர்செய்த சிந்தனைக்கோர் அமைதி கண்டேன்,
புதுவாழ்வை என்செயலால் பெற்றேன் !" என்றாள்.

தலையாரி சின்னப்பன் மகளாய் வந்து—
தாயிழந்தும் வறுமையினால் தாழ்ந்தி குந்தும்
கலையாத இயம்போல் எழில்ப டைத்துக்
காண்பவரின் கருத்தையெலாங் கலக்கு கின்ற
சிலையான அஞ்சலைக்கும், அண்டை வீட்டுச்
செல்வனுக்கும் இளமையிலே விளைந்த காதல்—
நிலையாகி நிலவு—விண்மீன் சாட்சி யாக
நேர்மையுடன் வளர்ந்தகதை ஊரே சொல்லும்!

காதலர்கள் பாதையிலே ஏழ்மை யென்னும்
கடும்புலியோ கொடுமையுடன் உறுமி நிற்க,
"வேதனையில் வேகுதற்கோர் விடிவு காண
வெளியூரில் சென்றேனும் பொருளைச் சேர்ப்பேன்.
சீதளவெண் ணிலவே, நீ சிரிப்பைக் காட்டிச்
செல்வதற்கு விடை தருவாய்!" என்றான் செல்வன்;
நாதமிலா யாழனையாள் விம்மிக் கொண்டே,
"நான்பிழைத்தால் சந்திப்போம், செல்க!" என்றாள்.

யாருக்குப் பெரியபண்பை உலகநாதர் —
ஒருமகனாய் வரம்வாங்கிப் பெற்றபிள்ளை,

யாருக்கும் அடங்காத முரட்டுக் காளை,
எவ்வளவும் நல்லகுணம் இல்லாமுடன்,

பேருக்கும் பண்புக்கும் பொருத்தமற்ற
பெண்சித்தன் மாணிக்கம், நண்பர் கூட்டப்

போருக்கும், சீர்கெட்ட செயல்களுக்கும்
போட்டியில்லாத் தலைவனாக வாழ்ந்த கீழோன் —

அஞ்சலையின் பேரழகில் நெஞ்ச ழிந்தான் ;
அவள்கற்பைச் சூறையிடத் திட்ட மிட்டான் !

வஞ்சனையால் சின்னப்பன் வெளியே செல்ல —
வலைப்பட்ட மான்போன்றாள் பரித விக்கிச்

சஞ்சலத்தால் துவண்டிருந்த தருணம் பார்த்துத்,
தன்துணைவர் புடைசூழப் படையெ டுத்துக்,

கெஞ்சலையும், கூச்சலையும் கேளா மூர்க்கன்
கெடுத்துவிட்டான் ; துடிதுடித்துத் தேம்ப லானாள் !

கன்னியவள் கற்பிழந்த செய்தி, ஊரில்
காட்டுத்தீ போற்பரவ, மறுநாட் காலை —
'என்னஇது தியாய'மெனப் பஞ்சா யத்தார்
எல்லாரும் மண்டபத்தில் கூடிக் கேட்க—
"என் மனத்தில் மூண்டிருந்த காதல் தீயை
இவளழகைப் பருகித்தான் அணைத்தேன்; ஆனால்,
இன்னுமிவள் சம்மதித்தால் இரண்டாந் தாரம்
என்றுநிலை தருகின்றேன்!" என்றான் தீயோன்!

அத்தானைப் பிரிந்ததனால் அழுதும், தேய்ந்தும்,
அமைதியின்றி ஊனுறக்கம் துறந்த பேதை
செத்தாலும் கிட்டரிய மானம் எல்லாம்
சென்றதனால் நடைப்பிணமாய் நின்று கொண்டு,
முத்தான வாய்திறந்து, "மூன்று மாதம்
முடிவதற்குள் என்முடிவைச் சொல்வேன்!" என்றாள்
சத்தான பொருளீட்டச் சென்ற அன்பன்
தனைக்காக்க வந்திடுவான் என்று நம்பி!

பட்டினத்தில் கெட்டலைந்தும், துன்பப் பட்டும்
பணந்திரட்டி, மணம்புரியும் ஆவ லோடு

பட்டினையாள் அணிவதற்குப் பட்டுச் சேலை,
பகட்டான நகைகளெல்லாம் வாங்கிக் கொண்டே

எட்டவந்த செல்வனது காதில், ஆங்கே
எதிர்ப்பட்டோர் நடந்ததை திரித்துக் கூறச் —

சட்டெனவே திரும்பலுற்றான் ; மனம்வெ தும்பிச்
" சகதியிலே கால்வைக்க மாட்டேன் !" என்றான்.

எந்தவழி போகின்றான் என்றறிந்து
" வாழ்க்கையிலே எஞ்சிநின்ற பற்றுக் கோடும்

இந்தவிதம் உதறிவிட்டால் என்ன செய்வேன் ?"
எனப்பதறிக் கணப்பொழுதில் ஓடிச் சென்று

சிந்தையெலாம் நிறைந்தவனின் காலில் வீழ்ந்து—
செந்நீரைக் கண்ணீராய்க் கொட்டி — அன்று

நைந்தவிதம் — நடந்தமுறை யாவுங் கூறி
" நல்வாழ்வா, தற்கொலையா, சொல்வீர் !" என்றான்.

‘ மனமொப்பி வரவேற்ற குற்றமில்லை ;
மந்திமனத் தீயோரால் வந்த தொல்லை !

இனமறியாக் குணவதிநீ யாது செய்வாய் ?
ஏழையரை மதியாதோர் தொலைய வேண்டும் !

வனமலர்போல் வாடுகின்ற விதவை யர்க்கும்
மறுவாழ்வு தருகின்ற சிறந்த காலம் —

சினம்விடுத்து மன்னித்தேன் ; துணிந்தேன் !” என்று
சேர்த்தணைத்தான் ; பார்த்திருந்தோர் மகிழ்ந்து சென்றார் !



"அப்பாவின் திருமணமாம் அடுத்த திங்கள் ;
அழகம்மை மாமிவந்து சொல்லிப் போனாள் ;

அப்பாவின் திருமணத்தைக் காண்ப தென்றால்,
அனைவர்க்கும் உன்போல வாய்க்கா" தென்றாள் !

எப்போதும் என்பேச்சை மதிக்கும் தோழி —
என்வயதுக் கனகம்மை இதைம றுத்தாள் !

"எப்போதும் எனைவெறுக்கும் எதிரி கட்கும்
இதுபோன்ற கொடுவாய்ப்பு வேண்டாம் !" என்றாள்.

"ஏனென்றால் ; எனையீன்ற தாயி ருந்தால்
இன்னொருத்தி இவ்விடத்தில் நுழைதல் ஏது ?

'தேனென்றும் மானென்றும் செல்வ மென்றும்
சீராட்டி வளர்த்தவளைப் பறிகொ டுத்தாய் !

நானென்றும் மாற்றாந்தாய் தானே !' என்று
நலங்குறைய எனையேசித் திட்டு தற்கே

தானென்றும் வந்தவளாய்க் கருதிக் கொள்ளும்
தாயென்னுந் தகுதியிலாள் வருதல் ஏது ?

'கண்ணில்லாக் குருடியெனக் கெங்கி குந்து
கலிதீர்க்க வந்தாயோ? சனியன், பீடை!

எண்ணில்லாத் துயரடைந்தேன் உன்னால்! நீங்கள்
இருவருமே தொலைந்தால்தான் எனக்க மைதி!

பண்ணில்லாப் பாடலினால் பயனே யில்லை!
பரவத்தின் உருவே!' என் றப்பா வைதால்.....

'கண்ணில்லா விட்டாலும் குறையே காணேன்!
கண்மணியின் அறிவுவேறு யாருக் குண்டு?

கலங்காதே! என்றென்னை அணைத்த வாறு
கண்ணீரால் குளிப்பாட்டி, உச்சி மோந்து,

நலங்கொள்ளும் முத்தங்கள் நானூ றீந்து,
'நானிருக்கும் வரையுனக்குப் பயமே யில்லை!

குலங்காக்க வந்தவளோ நீயொ ருத்தி!
குலுங்கியழ விடமாட்டேன் அன்பே!' என்று,

துலங்காத எனக்குற்ற துணையாய் நின்றாள்;
துடிதுடிக்கச் செய்துவிட்டுப் போனாள் அன்னை!

எனக்குத்தான் விழியில்லை, வழியுமில்லை ;
ஏங்குகின்ற இதயத்தைத் தூங்க வைப்பேன் ;

மனக்குரங்கு மரம்விட்டு மரத்தில் தாவி
வம்பேனும் செய்யாமல் வளிந்து காப்பேன் ;

உனக்கென்னைப் புரியாதா ? பருவம் வந்தால்
உருவமட்டும் பெரிதானால் போதா தன்றோ ?

நினைக்கின்ற எண்ணத்தை முகத்திற் காட்ட
நீள்விழிகள் இல்லாமல் ஏனோ ஆசை ?

விழிக்குள்ள சக்தியெலாம் நாவில் பெற்று
விளங்குகின்ற என்தோழி களங்க மில்லாள் ;

பழிக்கஞ்சும் பண்புக்கோர் இருக்கை யாவாள் !
பார்வையினால் பெறத்தக்க தீய வற்றை

அழிக்கின்ற தன்மைக்கோ குருடி யானாள் ?
அப்பாவோ கண்ணிருந்தும் குருடன் போலே !

செழிக்கின்ற மகள்விடத்து வாடும் போது,
சிட்டுப்போல் புதுமனைவி கட்டிக் கொண்டார்.

வந்தவளின் மனத்தினிலே மகனைப் பற்றி
மாசுதனை விதைத்து விட்டு, வினைவை நோக்கிச்
சிந்தைதிறை கவிப்போடு காத்திருந்தார்,
சீர்திருத்த உலகத்தின் மாற்றுங் காணார் !
தந்தைக்குத் தாரமெனும் நிலையைப் பெற்றாள்
தன்வயதுக் குமரியென உணர்ந்த தையல்,
நொந்திருக்கும் தனது நிலை எடுத்துக் கூற.....
நொடிப்பொழுதில் இருவருமே ஒருவ ராவார் !

புது மனைவி-முதலிரவு-இன்பம் பொங்கப்
பூரிக்கும் நினைவோடு கட்டில் மீது
மதுவெறிபோல் மனங்கவிக்க இருந்த நேரம்.....
" வருவதற்குத் தாமதித்தேன், மன்னி யுங்கள் !
இதுவரையில் இழைத்துவந்த கொடுமைக் கெல்லாம்
இப்போதே ஒருமுடிவு கட்ட வேண்டும் !
புது மனைவி மீதுமக்குப் பற்றி குந்தால் ...
புத்துலகு காணுகின்ற நினைவிருந்தால்...

வண்ணத்துப் பூச்சியைப்போல் சிறகடித்து
வாழ்வதற்குத் தவிக்கின்றமகளின் மீதும்

எண்ணத்தைத் திருப்புங்கள் ! உடனே தேடி
ஏற்றதொரு மணமகனைத் தேர்ந்தெடுத்துக்

கண்ணற்ற பெண்ணெனினும் பரிந்து காக்கும்
கண்ணியவான் கையிலிதை ஒப்படைத்தால் .....

சிண்ணத்துப் பாலமுதாய் நானு மக்குக்
கிட்டிடுவேன்" என்றுரைத்தாள் ; வெற்றி கண்டாள் !



நிழற்படங்கள் எடுக்கின்ற நிலையம் ஒன்றை
நெடுந்தெருவின் முனையினிலே அமைத்தி ருந்த
பழநியப்பன் பழம்நழுவிப் பாலில் வீழும்
பக்குவமாய்ப் பேசவல்ல இளைஞன்! நல்ல
அழகொழுகும் மாதிரிகள் நிறையக் காட்டி
அச்சாரம் முழுத்தொகையும் வாங்கிக் கொள்வான்!
வழக்கமாகப் படங்கொடுக்கத் தவணை சொல்லி,
வந்தவந்து போகவைப்பான் வம்புக் காரன்!

அடுத்தவீதிப் பலசரக்குச் சொக்க லிங்கம் —
அரிசியிலே வெள்ளைக்கல் கலந்து விற்றும்,
கொடுத்தகடன் இரட்டிப்பாய்த் திரும்பப் பெற்றும்
குவித்திருந்த கணக்கற்ற செல்வ மெல்லாம்
கெடுத்தழிக்கக் கொண்டுவந்த இரண்டாந் தாரம்
கிளிபோன்ற இளநங்கை மீனு, ஓர் நாள்,
உடுத்துதற்குப் பத்துவகை ஆடை யோடும்,
உயர்ந்தவகை நகைகளொடும் ஆங்கு வந்தாள்!

விதவிதமாய் உடல்வனப்பை வெளியிற் காட்டும்
வெவ்வேறாம் உடைமாற்றப் பழகி யப்பன்

உதவித்து விருப்பம்போற் பலகோ ணத்தில்
உருவத்தைப் பூரிப்பாயப் பதித்து கொண்டான்

பதவியினால் மனைவியெனும் பான்மை ஏற்றுப்
பயனின்றி நாள்கடத்துங் கோதை—யாவும்

கதவிடுக்கில் கவனித்துச் சிந்தை நொந்தாள்
'கற்பூரம் அருகினிலே நெருப்பா?' என்று!

பாடங்கேட்கத் தினம்வருவாள் மீனு; உள்ளே
பட்டென்று விளக்கணையும்; எரியும் மின்னார்!

பாடங்கொடுத்தாள் பாலமுதை உண்ணும் பேறு
பறந்திடுமே! தருவானா, பழகி யப்பன்?

மடம், பயிர்ப்பு, நாண், அச்சம் துறந்து, காம
மயக்கத்தில் கணவனுக்குத் துரோகம் செய்தாள்!

இடங்கொடுத்தாள்; கடன்கொடுத்தான்; இருவர் கூடி
இன்பத்துச் சுகதியிலே புரளலானார்!

மனைவிதனைக் காணவுமே நேர மில்லை ;
மனமுமில்லை ; மறந்திட்டான் பழநி யப்பன் !
நினைவெல்லாம் மாற்றானின் துணைவி மீது !
நேர்மையினை எடுத்துரைத்த மனையாள், நண்பர்
அனைவருமே பகைவரென எண்ண லானான் !
அல்வழியில் நுழைந்தவற்குத் தன்மை ஏது ?
தனைவெறுக்குங் கொழுநனுக்குக் கோதை, பாடத்
தரமுனைந்தாள் ; சொர்க்கலிங்கம் வீட டைந்தாள் !

நிலவரத்தை விண்டுரைத்தாள் ! துடித்துப் போனார் !!
நீதிதனை நிலைநாட்டத் திட்ட மிட்டுக்
குலவுகின்ற நடிப்போடு, கணவன் பார்க்கக்
கொஞ்சிநின்றாள் ! மீனாவைத் தேடி வந்தோன் —
கலகலத்துப் பொங்கிஎழ — " மனைவி மட்டும்
கற்புநெறி நிற்கவேண்டும் ! தலைவன் கள்ளக்
கலவிதனில் உலவிடுதல் முறையோ ? " .. என்னக்
" கண்திறந்தேன், மன்னிப்பீர் !" என்றான் ; சென்றார் !

பொன்னியை நான் காதலித்தும் மணக்க வில்லை ;
பொருத்தமில்லை என்றுரைத்தும் மறுத்த தில்லை !

" சின்னவனை எதற்காகக் கேட்க வேண்டும் ?
தெரியாதா நமக் " கென்று பெரியோர் கூடி —

என்னென்ன சீர்வரிசை, நகைகள், சாமான்
இன்னபிறு யாவையுமே தமக்குள் பேசி,

அன்னவளை என்கழுத்தில் கட்டி விட்டார் !
அருகமர்ந்து மணவறையில் தாலி கட்டத்

திரும்புகையில், முதன் முறையாய், அவளைப் பார்த்தேன் ;
சிரங்கவிழ்ந்து, நாணத்தால் நிலத்தை நோக்கி,

அரும்புகின்ற வியர்வைஉடல் எங்கும் ஓட,
அங்கமெலாம் படபடக்கும் அச்சத் தோடு,

வரும்பெரிய வாய்ப்புகளில் அரும்பொ ருப்பு
வகிப்பதற்கு வழிதேடி மயங்கி னளோ ?

விரும்பியவர் றறிந்துகொள்ள முடிய வில்லை !
வேறுதல்ல தருணத்தைத் கருதி ; விட்டேன் !

அடுத்தென்ன தெரியாதா? வழக்கந் தானே!
அறைக்குள்ளே இருவரையும் சிறைப்ப டுத்தி

விடுத்திட்டார்; உளந்திறந்து கலந்து பேசி,
விரைவாக இருமனமும் திருமணத்தால்

அடுத்திட்ட புதுவாழ்வில் ஒன்றாய் ஆகி,
அகத்துறையின் சுகத்தையெலாந் துய்ப்ப தற்கும்,

தடுத்திட்ட நாணத்தை—வேறு பாட்டைத்—
தவிர்த்துவிட்டுக் கூடுதற்கும் வாய்ப்பைத் தந்தார்!

அம்முறையால் வெற்றியெனக் கெட்ட வில்லை,
அடியோடு படுதோல்வி கண்டேன்; உண்மை!

எம்முறையில் என்மனைவி வளர்ந்தாள் என்றால்.....
இதுவரையில் சிற்றூரில் வீட்டுக் குள்ளே

தம்முறவின் ஆடவருங் கானு வண்ணம்
தலைமறைவாய் நிலவறையிற் கைதி போலாம்!

அம்மம்ம! அதனால்தான் புதிய ஆணாய்
அடியேனைக் கண்டவுடன் அஞ்சிச் செத்தாள்!

அன்றோடு தீரவில்லை இந்தத் தொல்லை ;
ஐந்தாறு மாதங்கள் ஆன பின்னும்,
என்றேனும் என்னெதிரில் வரநே ரிட்டால் .....
ஏழெட்டுப் புலி, சிங்கம், கரடி, யானை
ஒன்றாகக் கண்டதுபோல் ஓடிப் போவாள் —
உடனேஎன் தாயாரின் பின்ம றைவாள் !
கொன்றாலுந் தவறன்று ; கொடுமை யாகக்
குற்றுயிராய் வதைத்திட்டாள் நாணத் தாலே

நண்பனிடம் இதுபற்றி விவரங் கூறி,
நடப்பதற்கு வழிகேட்டேன் ; "நாணந் தானே
பண்புள்ள மனைவியரைப் பாது காக்கும்
பலம்வாய்ந்த கவசம் ; இது கொண்ட தாலே
அன்றில்லை உன்மீதில் என்று கொள்வாய் ?
அதுதவறு ; மெதுவாகச் சரியாய்ப் போகும் ;
என்போலப் பொதுத்தொண்டில் கவனங் காட்டி,
இதைச்சிறிது மறப்பதுதான் நன்மை !" என்றான்

வஞ்சிக்கப் படுகின்ற சமுதாய யத்தின்
வாழ்வுக்குப் போராடும் படையில் சேர
நெஞ்சக்குள் இதயத்தில் ஈர மில்லார்
நிலையாத நிலைகண்டு மனம்பு ழுங்கிக்
கஞ்சிக்கும் கதியற்றோர் வாட்டம் போக்கக்
களத்தினிலே அறப்போரில் குதித்தும் விட்டேன் !
வெஞ்சிறையில் ஆறுதிங்கள் விருப்பி வாழ்ந்தேன் ;
வேறென்ன கைம்மாறு தாய்க்குச் செய்வேன் ?

"விடுதலையாம் வெளியேபோ !" என்று சொன்னாள் —
"வேட்கையுடன் கேட்டதெல்லாம் இங்கே தானே !
படுதுயரைப் பொருட்டாகக் கருதி டாமல்,
பண்டைமது மூதாதை ஆண்ட நாட்டில்
விடுதலையும் அதன்மூலம் வளமுங் காண
வேண்டுகிறோம் ; மீண்டுமிங்கு வரவுங் கூடும்.
கெடுதலெனக் கருதாதீர் ஐயா !" என்றேன் ;
கேளிரொடு நண்பரெல்லாம் வாழ்த்தி நின்றார் !

மனைவிக்கு மகன்பிறந்த கனிப்புச் செய்தி
வந்திருந்தோர் தெரிவித்து மகிழ்வு பூண்டார்.

திசைவெல்லாம் அவளாக ஓடிச் சென்றேன் —
தேரடியாய்ப் பார்த்துவிட்டால் நாணு மென்றே

அனைவரையும் அனுப்பிவிட்டுத் தனியே போனேன்!
"அத்தானு? வாருங்கள்! அருமைச் செல்வன்

இனியேனும் நமைப்பிரிக்கா திருப்பா னாக!
என்னெதிரே அமருங்கள்!" என்றாள், விந்தை!

நெகிழ்ந்திருக்கும் ஆடைதனைத் திருத்தி டாமல்
நிலைமறந்து குலக்கொடியின் வரவால் மிக்க

மகிழ்ந்திருக்கும் மனப்பாங்கை முகத்திற் காட்டி
வற்றாத பரிவோடும் அமுதப் பாலைப்

பகிர்ந்தளிக்கும் பாசத்தை என்ன சொல்வேன்!
பழையநாள் நாணத்தைத் துளியும் காணோம்!

தகர்த்தெறிய வந்த, என்றன் புதிய வீரன்
தாயகத்தின் நிலைஉயர நெடுநாள் வாழ்க!

சிவன்கோயில் மண்டபத்தில் சிறப்புக் கூட்டம்,
சிவனடியை மறவாத முருகானந்தர் —

தவக்கோலம் பூண்டிருக்கும் இளைஞர்—இன்பத்
தமிழ்மொழியில் பக்திரசம் சொட்டச் சொட்ட,

நவநவமாய் மேற்கோளை அள்ளி வீசி,
நட்டுவனார் அபிநயம்போல் நடித்துக் காட்டி,

அவன் செயலால் ஆடுகின்ற அகில மீதில்
ஆசைகளை அறுத்தவர்க்கே மோட்சம் என்றே—

அருணகிரி, பட்டினத்தார், தாயுமானார்,
அப்பருடன் நாயன்மார் அருளித் தந்த

பெருமைமிகு பாசுரங்கள் உருகிப் பாடிப்
பெண்ணினமே மாயையெனப், போலி யான

கருணையுடன் நிலைநாட்டிக்—களைப்பு நீங்கக்
காய்ச்சியபால் அருந்துகையில் கடைக்கண் ணாலே

தருணமது தவறாமல் தாய்க்கு லத்தார்
சார்ந்திருந்த பக்கத்தில் மேய்ந்த போது.....

முன்னாலே அமர்ந்திருந்த மோகனும்பாள்
முறுவலித்தாள் பிறரெவரும் அறியா வண்ணம் !

"பின்னாலே பிறவற்றைச் சொல்வோம் !" என்று
பிரசங்கம் முடித்துவிட்டுப் பெருமாள் என்னும்

தன் ஆனை அருகழைத்துத் தையல் மீது
தான்கொண்ட தணியாத காதல் கூறி,

அன்னாவின் வீட்டுக்குத் தூத னுப்பி—
அன்றிரவே வேற்றுடையில் தானும் சென்றார் !

வந்தவரை வரவேற்று வணக்கங் கூறி,
வடிவழகி தொடங்கிவிட்டாள் சுடுவ தற்கு !

"இந்தாரும், படித்தவரே ! உமக்கேன் வேடம் ?
இயற்கையிலே எழுகின்ற இன்ப ஊற்றைச்

சிந்தையிலே அடைத்துவைக்க யாரால் ஆகும் ?
சிவக்கோலம் களைந்துவிட்டு நீங்கி வந்தால்

தந்திடுவேன் என்னை உமக்கே !" என்றாள் ; "அன்பே !
சம்மதித்தேன், திருந்திவிட்டேன் !" என்றார் : வாழ்ந்தார்.

தியாகத் திருமணம்

ஒப்பனைகள் ஏதுமின்றி, நகைகள் இன்றி,
உயர்ந்தவகை ஆடைகளும் உடுத்தி டாமல்
செப்பரிய எழிலோடு செதுக்கி வைத்த
சிலைபோன்றாள் சிங்காரி ; சிறுமை பெற்ற
நாப்பையிலே குன்றிமணி கிடந்தாற் போலக்
கொடுமையுந் தரித்திரத்திற் கடிமை யான
அப்பனுக்கு முதல்மகளாய் உதித்தாள் ; பின்னர்
அடுத்துவந்த ஆறுவருக்கும் தமக்கை யானாள் !

பெண்டாட்டி நோயாளி ; பெரிய பெண்ணோ
பெற்றோரை அச்சுறுத்தும் பருவ மங்கை !
கொண்டானின் ஆன்றுட வருமா னத்தில்
குழந்தைகளின் அரைவயிறு நிரப்பி விட்டுத்
திண்டாடும் நிலைமையினால் காலமெல்லாம்
சீர்கெட்ட வாழ்க்கையிலே திளைத்தி ருந்தும்,
கண்டார்முன் தன்மதிப்பைக் கண்ணி யத்தைக்
காப்பாற்றும் பெற்றியிலே தலைசி றந்தார் !

எதிர்வீட்டுச் சீமானின் செல்வ மைந்தன்
இளமைமுதல் விளையாட்டுத் தோழ னாகப்
புதிர்போட்டும் விடுவித்தும், பாட்டுக் கற்றும்,
புதுக்கதைகள் புனைந்துரைத்தும் பழகி வந்தோன்
கதிர் நீட்டி அறுவடைக்குக் காத்து நிற்கும்
கழனிவளர் நெற்பயிர்போல் செழித்து, நெஞ்சில்
சதிராட்டம் போட்டுநின்ற சிங்கா ரிக்குத்
தன் உணர்வைப் பறிகொடுத்துக், காதல் பெற்றான் ;

கண்வழியே மொழிபேசிப், பிறர்கா ணாமல்
கடைவிதழில் புன்சிரிப்பை நெளிய விட்டு,
விண்வழியே கடிதங்கள் பறக்கச் செய்து,
விழிமூடி உறங்குகையில் கனவு கண்டு,
பெண்வழியாம் நாணத்தால் பின்ன டைந்த
பெருமகளைத் தனியிடத்தில் ஒருநாள் பார்த்து,
மண்வழியின் வழக்கத்தால் ஆனு ரைக்கும்
வாக்குறுதி தந்துசென்றான் பணத்தால் மேலோன் !

தந்தைக்கு மகன்சேதி காதில் வீழத்
தன்போக்கில் விடுவாரா? கேட்டு விட்டார்;

"விந்தையடா; மலைமுகடு பள்ளத் தாக்கை
விரும்புகின்ற அதிசயத்தை இன்றே கண்டேன்!

சொந்தமெல்லாம் நமக்கெதுக்கு வறிய ரோடு?
சொல்விடுவாய், எதுவேண்டும்; அவளா? சொத்தா?"

சிந்தனையைக் கலக்குமிந்தக் கேள்விக் குப்பின்...
சொல்வந்தர் மகனுக நடந்து கொண்டான்!

மலைபோல நம்பிவந்த காத லன்தான்
மகத்தான துரோகத்தைச் செய்த தாலே

அலைமோதும் உள்ளத்தாள் அறைக்குள் வீழ்ந்தே
அழுவதன்றிப் பிறரிடத்தில் மொழிதல் ஆமோ?

விலைபோகும் சரக்கன்றோ கன்னிப் பெண்ணாள்?
விபரீதம் விளைந்திடுமே வெளியார் கேட்டால்!

தலைமீது கரத்தாலே மோதிக் கொண்டு
தன்தவற்றை நொந்து, பின்னர் தருணம் பார்த்தாள்,

கடன்தொல்லை மிகுதியினால் தந்தை மாண்டார் !
காத்திருந்த கழுகுகளோ பார்க்கிக் காக
உடன்வந்து குடியிருந்த வீட்டை விட்டே
ஓழுங்காகக் காலிசெய்யச் சொல்லிப் போனார் !

மடங்கொண்ட பெண்மயிலாள் மனமு டைந்து
மாற்றாரின் ஏளனத்தை எண்ணி நைந்தாள் ;
திடங்கொண்டு சிந்தித்துத் தெம்பு பெற்றாள் ;
தெருக்கோடி வீட்டுக்கு விரைந்து சென்றாள் !

குன்றனைய செல்வத்தைக் குவித்து வைத்தும்,
கூப்பிட்ட குரல்கேட்க ஆளில் லாமல்,
அன்றன்று வருகின்ற வட்டிக் காசை
அப்படியே துருப்பிடிக்கப் பூட்டி விட்டே
'என்றைக்கு வாழ்நாளின் இறுதி யாமோ?'
என்கின்ற அச்சத்தோ டுயிர்வாழ் கின்ற
பன்றிநகர் சீமானின் மாளி கைக்குள்,
பாலையவள் கண்ணகிபோல் சென்று நின்றாள் !

வழக்குரைத்தான் ; வறுமையினால் தந்தை மாளவ
வதங்குகின்ற தாய்தங்கை தம்பி மார்க்கும்

பழக்கவழம் உணவில்லா நிலைமை கூறி,
பலுத்தர்கள் கைவிட்ட கதையும் சொல்லி,

வழக்கமில்லா முறையாகக் காலில் வீழ்ந்தாள் !
வறுண்டமனப் பெரியாரும் இரக்கங் கொண்டார் ;

எழுக்கரை நீ பழிவாங்கச் சம்ம தித்தால்
சரியான வழியொன்று சொல்வேன் ! என்னைத்

திருமணம்நீ புரிந்துகொண்டால் சிக்கல் தீரும் —
திரண்டபெருஞ் சொத்துக்கும் தலைவி யாவாய் !

ஒருகுணமும் வறுமையினால் வாட வேண்டாம் !
உடன்பிறந்தார் நல்வாழ்வுக் கிடங்கி டைக்கும் !

ஒருமனதாய் ஒப்பிவிட்டால் உயிர்போல் காப்பேன் !
உரைத்திடுவாய் உன்பதிலை !'' என்றான், ஐயா !

'' திருமணத்தால் என்வாழ்வைத் தியாகம் செய்து,
தீயவர்க்கு நற்பாடம் சொல்வேன் !'' என்றாள்.

ஊர்க்கோடி ஐயப்ப சாமி கோயில்
உருப்படியாய் இருப்பதற்கும், வேளை தோறும்
பார்க்கவரும் பக்தருள்ளம் மகிழ தற்கும்
பக்குவமாய் அலங்கரித்தும், ஆரா தித்தும்,
பார்க்கென்ன நேர்ந்தாலும் உடனே ஓடி
இருவிரலால் திருநீற்றை எடுத்த ளித்துத்
தீர்க்கின்ற மகானுக விளங்கு தற்கும்
தெய்வபலம் காரணமென் றாரே மெச்சும் !

அதிகாலை தலைமுழுகி, ஈர ஆடை
அரைதனிலே தரித்துப், பின் மேனி யெங்கும்
பதினேரு இடங்களிலே பட்டை தீட்டிப்
(பட்டையென்றால் திருநீற்றைப் பட்டையே தான் !)
கதிரோனைக் கீழ்த்திசையில் காணு முன்னர்
கையினிலே நைவேத்யக் கிண்ணம் ஏந்தி
அதிவேக மாய்ச்செல்வார் ; ஆறு காலம் —
அர்த்தசாம பூசைவரை ஓய மாட்டார் !

சிவகூரன குருக்களுக்குச் சிலநாளாகச்
சிந்தைதனைக் குழப்புகின்ற செய்தி ஒன்றும் !

அவமானம் வந்துற்றால் அரைநொடிக்குள்
அவ்வளவு செல்வாக்கும் பறந்து போகும் !

தவமிருந்து பெற்றமகள் பிறந்த போதே
தாயாரை உருட்டிவிட்டாள் : சகித்துக் கொண்டார் !

சவமான மனைவியின்மேல் ஆணை விட்டுச்
'சத்தியமாய் மறுமணமே புரியேன்' என்றார்.

காலத்தால் வளர்ந்தமகள் பருவம் எய்தக் —
கலியாணச் சந்தையிலே மலிவாய்த் தேடிச்

சீலத்தை, நோயற்ற வாழ்வில் வாழும்
செல்வத்தைப் பெரிதாகக் கருதி டாமல்

கோலத்தால் மாப்பிள்ளை யாக்கிக் கொண்டார் :
கோள்பார்த்து, நாள்பார்த்தும் குறைந்த நாளில்
ஞாலத்தைப் பிரிந்துசென்றான் மகளைக் கொண்டோன் !
நாகரிக விதவையாக நங்கை மாறித்

தாலிதனைக் களைந்துவிட்டாள் ; தலையில் கூந்தல்
தனைக்களைய ஒப்பவில்லை ; வெள்ளை வண்ணச்
சேலைதனைத் தேடவில்லை ; வெற்றி மீது
திலகமிடத் துணிவில்லை ; எனினும் மற்றப்
பேரழியலங் காரமெல்லாம் திறுத்த வில்லை !
புதுமணப்பெண் போலிருந்தாள் வீட்டி னுள்ளே !
வேலியென அமைந்திருந்த தந்தை யர்க்கோ
வெளிவேலை எப்போதும் அதிகம் அன்றோ ?

தானுந்தன் தாயற்ற விதவைப் பெண்ணும்
தனித்திருக்கும் வீட்டினிலே பொழுது போக்க
ஆனந்த விகடகதிர் குமுதம் கல்கி
அவ்வளவும் கதைஏடாய் அஞ்சல் மூலம் —
வானந்தான் மழைபொழியத் தவறி னாலும்
வரத்தவறு வகைசெய்த காரணத்தால்...
ஏனந்த இளைஞனை அஞ்சற் காரன்
எப்பொழுதும் அப்பக்கம் நடக்க மாட்டான் ?

பத்திரிகை இரவலாகப் படிக்கக் கேட்டுப்
பக்கத்தில் யாருமற்ற நேரம் பார்த்துச்

'சித்திரமே! சிலையே!' என் றழைத்துப் பின்னர்
சிரிப்பதற்குத் தொடங்கியவன், சிறிது நாளில்.

நித்திரையிற் கைநிடித்த கனவைச் சொல்லி,
நேரடியாய் நெருங்கி, உடல் நொறுங்கு மாறு

முத்திரையைப் பதிப்பித்து முயங்கு தற்கும்
முயல்கின்ற வேளையிலே....அயலார் வந்தார்!

"குருக்களையா பெண்ணுக்குக் கேடு காலம்
குடிகெடுக்கத் திட்டமிட்டாள் குணமே கெட்டாள்;

இருக்கின்ற நிலைமறந்தாள்; இதனைக் கேட்டால்
எப்படித்தான் மனஞ்சகிப்பார் ஒழுக்க சீலர்!

ஒருக்காலும் அவர்பெயரை இவள்கெ டுக்க
ஒருப்படோம்!" என்றுசொன்னார் அண்டை வீட்டார்,

பெருக்கெடுத்த காதலூற்று வறண்டா போகும்?
பிறரறியா இடந்தேடிப் புறப்பட்டார்கள்!

ஆனுருவில் ஆண்டவர்க்குப் பிறந்த தேவன்
ஐயப்பன் கோவிலுக்குள் இரவில் சென்றார் :

வீணுக்குப் பயமில்லை ; விதியை வென்று
மீறிவரும் காதலுக்கோர் ஊறு மில்லை !

காணக்கண் கூசுகின்ற காட்சி கண்டு
கற்சிலையாய் நின்று விட்டார் காதலர்கள் !

தூணுக்குப் பின்புறத்தில் குருக்கள் ஐயர
துடியிடையாள் மடிமீது துவண்டு குந்தார் !

" சாதிகெட்ட இவனுக்குச் சாமி பேரால்
சாப்பாடு படைத்தீரோ, இரவு தோறும் !

பாதிவிட்ட பூசையென்றீர், இதனைத் தானே ?
பகல்வேடம் போட்டதெல்லாம் போதும், அப்பா !

நீதிகெட்ட முறையெதற்கு நமக்குள் ? தத்தம்
நெஞ்சத்தைக் கவர்ந்தவர்க்குச் சொந்த மாவோம் !

சேதிவிட்டு ஊர்மக்கள் திரளு முன்னர்
திருமணங்கள் முடியட்டும் !" என்றாள் மங்கை.

பகலும் இரவும்

"இட்டிலியில் உப்பின்றிச் சுட்டாள்; நல்ல
எண்ணெயில்லை; சட்டினியோ பொல்லாக் காரம்!

பட்டினியால் மடிவதற்கா இவளைக் கொண்டேன்?
பகல் முழுவதும் அழுவலிலா நாட்டஞ் செல்லும்?

வெட்டிடவா இவளுறவை? விலக்க எத்து
விரட்டிடவா? உடனேசொல்!" என்றான் நண்பன்.

"அட்டியில்லை; அனுப்பிவிடு தாய்வீட் டுக்கே!
அப்போதே உருப்படுவாய்!" என்றேன், சென்றேன்.

முன்னிரவு; மணி எட்டு; திரும்பி வந்தேன்;
மூடிவைத்த கதவினுள்ளே பேச்சுக் கேட்டேன்;

"சொன்னதெலாம் மறந்துவிடு; மன்னித் துக்கொள்!
சூடுவரக் கன்னத்தில் அறைந்து கொள்வேன்;

உன்னையினி ஒருநாளும் திட்டமாட்டேன்!
உன்மத்த நண்பன்சொல் கேட்க மாட்டேன்..."
இன்னுமென்ன சொன்னானோ? ஓடி விட்டேன்!

என்முகத்தை எங்கேபோய் வைத்துக் கொள்வேன்?

இயல் 2

ஆழுகை

ஆனந்தம்

கவிதைகள்

உள்ளே.....

- எத்தனிடம் ஏமாந்தாள்
- பழி தீர்ந்தது
- மனத்திமிர்
- துரைக்கண்ணம்மாள்
- செல்வமும் சுகவாழ்வும்
- துன்ப வெள்ளம்
- ஒருநாள் இன்பம்
- முதல் கண்ணீர்
- வேலை நிறுத்தம்
- ஏழை சொல்
- எது மானம்

எத்தனிடம் ஏமாந்தாள்

பட்டணத்து நாகரிகக் கலப்பே யில்லாப்
பட்டிக்கா டென்பதற்கோர் எடுத்துக் காட்டாய்க்
கட்டழகு, கண்கவரும் பருவத் தோற்றம்,
கள்ளமிலாப் பிள்ளைமனம் இவையும் கூடி,
மொட்டவிழ்ந்து மணம்பரப்பும் அரும்பு போன்றாள்
முல்லையெனும் பெயருடையாள், முறையூர் என்ற
வெட்டவெளி மிகுந்துள்ள சிற்றூர் தன்னில்
விளையாடி வளர்ந்துவந்தாள், வேக மாக !

பக்கத்து வீட்டிலுள்ள பார்வ திக்குப்
பத்தாண்டாய்க் குழந்தையில்லை ! அதனால் முல்லை,
எக்கணமும் பிரியாமல் ' அம்மா, அம்மா !'
என்றழைப்பாள் ; அங்கேயே குடியி ருப்பாள் !
தக்கதொரு வசதியற்ற குடும்பம் ஆகத்
தன்னாலே இயன்றவரை உதவி செய்து
மிக்கமனம் மகிழ்ச்சியுற நடந்து வந்தாள் :
மெதுவாகப் பார்வதியைக் கவர்ந்து விட்டாள் !

பூப்படைந்த முல்லைமணம் நுகரு தற்குப்
புத்திளமைக் காளையர்க்குத் துணிவே யில்லை !
ஊப்படைந்து, முதல்துணையை யிழந்து, மீண்டும்
முல்லைதனை மறுமணமாய்ப் புரிந்து கொள்ள
யாப்பறியாக் கவிஞன்போல் ஒருவன் வந்தான் !
யாதுகுறை ? பொருள்திறையப் பெற்றுள் ளானே ?
காப்பதற்கு வகையில்லாப் பெற்றோர், இந்தக்
கடுமணத்துக் கொப்பிவிட்டார் ; அழுதாள் முல்லை !

மணமகட்குப் பரிசாகப் பொன்ன கைகள்
வழுக்கிவிழும் பட்டாடை யாவும் தந்து—
மணமடலும் அச்சிட்டு ; வயதைக் காட்டும்
மண்டைக்குக் கருஞ்சாந்து தடவிக் கொண்டு ;
பணமலையில் மறைந்திருக்கும் கிழவன், இன்பப்
பன்னீரில் குளித்திருந்தான் ! நாளை எண்ணிப்
பிணமனையாள் வாழ்ந்திருந்தாள், ஏழை யாகப்
பிறந்துவிட்ட கொடுமைதனை எண்ணி, ஏங்கி !

தேற்றுகின்ற பார்வதிக்கும் கண்ணீர் பொங்கும்
தேம்புகின்ற முல்லைதனை அணைத்துத், துன்பம்
மாற்றுகின்ற நன்மொழிகள் புகல்வாள்! வெள்ளை
மனத்தினிலே சிறுநேரம் அமைதி காணும்...

ஏற்றுவிட்ட ஏணிதனை உதைத்துத் தள்ளும்
எத்தர்க்குத் தலைவனான முத்தன் என்பான் —
தோற்றத்தில் தூயோன்போல் காண்பான்; நல்ல
தோகைமயில் பார்வதிக்குத் தம்பி யாவான்!

வருந்தியழைக் காவிடினும் வருவான்; அக்கா —
மனங்கோணும் வரையங்கே தங்கிச் செல்வான்!
விருந்தினனாய்த் திடீரென்று வந்தான் ஓர்நாள்!
வீட்டுக்குள் ஒருவருமே இல்லை! முல்லை
திருந்தாத உடையோடு கொல்லைப் பக்கம்
திண்ணையிலே உறங்கிவிட்டாள்; விழித்த போது
பருந்தெனவே கவ்வுகின்ற விழிகள் கண்டு
பயத்தோடு தன்வீட்டில் நுழைந்து கொண்டாள்!

தம்பிவந்த செய்திதனை அக்கா கேட்டுத்
தாம்பூலம் வாங்கிவந்து போடச் சொல்லித்,
தெம்புதரத் தேநீரும் வைத்துத் தந்து,
சிலபேச்சுத் தாய்வீடு பற்றிப் பேசி ;
"வம்புதனைக் கேட்டாயா, தம்பி ! இங்கோர்
வயோதிகன்தன் கைபற்றி ஊன்றிச் செல்லும்
கம்பாகக் போகின்றாள் நமது மூல்லை !
கடுகளவும் நியாயமிதில் உண்டோ ?" என்றாள்.

அக்காவின் மறுப்புதனை முதலாய்க் கொண்டே
அழகாகக் திட்டமொன்று தீட்டி விட்டான் !
எக்காலும் இளைஞருடன் பழகி டாத
ஏதுமறியாச் சிறுமி மூல்லை தன்னைத்
தக்கான்போல் தனியாக இரவில் பார்த்துத்
தான் அவளைக் காப்பாற்ற வேண்டு மென்ப(து)
அக்காவின் விருப்பமென மெய்போல் கூறி —
அன்றிரவே கடத்திவிட்டான் ஊரை விட்டே !

புலியிடத்தில் இரையாக அஞ்சி ஓடிப்
பொல்லாத வேங்கையிடம் சிக்கி னுற்போல் —

பலியிடத்து வெள்ளாடாய் ஆனுன் முல்லை ;
பறிகொடுத்தாள் உயிரைவிட மேலாம் கற்பை !

பொலிவிழந்து, நகையிழந்து, போர்க்கற் ருளைப்
புன்மதியோன் கைவிட்டுப் புகைபோல் போனுன் !

மலிவான பதநீரைக் குடித்த பின்பு
மதிப்பாரோ பனைஓலை மட்டை தன்னை !

•

செல்லாத காசாகித் தாய்வீட் டிற்கும்
திரும்பிவரத் தடையாகி 'ஓடு காலி,

பொல்லாங்குப் பழிகாரி' என்ற பட்டம்
புவியெங்கும் பரவிநிற்க, வாழ்தல் எங்கே ?

பல்லாண்டு தழைத்திருக்கப் படர்ந்து நின்ற
பசுமரத்தில் இடிவீழ்ந்து கருகி னுற்போல்

இல்லாத குடும்பத்தில் பிறந்தான் செத்தான் !
இந்நிலைக்குக் காரணந்தான் யாரே, சொல்வீர் ?

நள்ளிரவு நேரத்தில் தலையைச் சாய்த்தேன்,
நாளெல்லாம் அடுக்களையில் உழன்ற பின்னர் !

துள்ளிவரும் நினைவலைகள் தொடர்ந்து தாக்கச்
சோர்வுற்றுக் கண்ணயர முயன்ற போது...

வள்ளியெனுஞ் சிறுமிவந்து, "அம்மாள் உன்னை
வரச்சொன்னார் போர !" என்றாள். "எங்கே ?" என்றேன்.

"பள்ளியறைக் குள்ளேதான் இருக்கின் றார்கள் ;
பார்விரைவில் !" என்றுரைத்தாள் ; எழுந்தேன் தாவி !

கட்டவிழ்ந்த தாமரைப்பூ முகத்தின் மீது
கருவண்டு போற்சுழலுங் கரந்தக் கண்கள் ;

வட்டநிலா ஒளியனைய வண்ணந் தோய்ந்து
வாடாத இளமைநலன் திகழும் அங்கம் ;

பட்டுடைகள் அணிவதற்கே வாய்த்த மேனி ;
பார்த்தவர்கள் ஆவலினை மேலுந் தூண்டித்

தொட்டணைக்கத் தவிப்பதுந் தோற்றங் கொண்ட
தோரகைமயில் என்றுலகை தனித்தி குந்தாள்.

"அருகினில்வா கண்ணகி !" என் றழைத்தாள் ; சென்றேன் !
அறைக்கதவைத் தாழிட்டாள் ; அஞ்சி நின்றேன் !

"தருகின்றேன் உன்னிடத்தில் கடிதம் ஒன்று ;
தனியாக இப்போதே கனியூர் சென்று,

முருகையன் என்பவர்பால் தந்து விட்டு,
முன்னையநாள் காதலிதான் அவரில் லாமல்

உருகிநிற்கும் நிலைகூறி, 'உடன்வந் தால்தான்
உயிர்தரிப்பாள் எம்தலைவி !' எனவும் சொல்வாய் ;

நாளைமறு நாளிரவு நமது பூமான்
நம்வீட்டில் இருக்கமாட்டார் என்றும், அந்தக்

காளைவர நல்லதொரு வாய்ப்பாம் என்றும்,
கட்டாயம் புறக்கடையில் காத்தி ருந்தால்

ஆளைவிட்டுக் கூட்டிவரச் செய்வேன் என்றும்.....
யாருமறி யாவண்ணங் கூறி வந்தால்;

தோளைவிட்டுக் கழற்றாத காசு மாலை
தோழியுனக் களித்திடுவேன் பரிசாய் !" என்றாள்.

'சரி' யென்று தலையசைத்துக் கடிதம் பெற்றுச்
சாரேலென்று வெளிவந்த பிறகென் நெஞ்சில்

வரிசைபடத்திரைப்படம்போல் நகர்ந்த காட்சி —
மறக்காமல் நான்காண்டாய் மனத்துள் ஊன்றி

எரிமலையாய்க் குமுறுகின்ற அந்த எண்ணம் :—
'என்தந்தைக் கொருமகளாய்ப் பருவ மென்னும்

அரியணையில் வீற்றிருந்த காலம், இந்த
அற்பகுண முருகையன் வலையில் வீழ்தல் ;

வழக்கம்போல் வாக்குறுதி ; இன்பச் சேர்க்கை ;
வயிற்றுக்குள் புதுவரவு மணத்தின் முன்பே ;

பழக்கம் போல் கைவிரிப்பு ; பரவை தேம்பல் ;
பதறிவிட்ட பெற்றவரின் மரணம் ; கெட்ட

சழக்கனுக்குச் சந்தர்ப்பம் ஓடிப் போக ;
சமூகத்தின் திந்தனைகள் ; அன்று நங்கை

இழக்கவிட்ட கற்புக்கு விலையாய் அந்த
இரக்கமற்றோன் உயிர்பறிக்கச் சூழ்ந்தரைத்தல் !

திறமையுடன் தூதுசென்று மீண்டேன் ; கற்புத்
திருடனுக்குத் தெரியவில்லை என்னை ! என்றும்,

பிறன்மனையை நயக்கின்ற பேடி கட்குப்
பின்விளைவை எண்ணுகின்ற உணர்வு முண்டோ ?

அறனழிக்கத் திட்டமிட்ட இருவர் வாழ்வும்
அடியரவின் பிடியிலன்றோ ? என்ன விந்தை !

புறமனையில் காரிருளில் ஒளிந்தி ருந்த
புல்லனுக்கு வழிகாட்டி அழைத்து வந்தேன்—

என்னெதிரில் இன்னொருபெண் என்இ டத்தில்
எனைக்கெடுத்த சண்டாளன் அணைப்பில் சிக்கித்,

தன்னைமறந் தந்நியரின் மனைவி யென்னுந்
தகைமறந்து கள்ளசுகங் காணு கின்றாள் !

" பொன்கலத்தில் பழச்சாறும் புதிய பாலும்
பேரயுடனே கொண்டுவாடி ! வெளியி லுள்ள

பின்விளக்கை அணைத்துவிட்டு, விரைவில் வந்து
வேற்றார்கள் வாராமல் காவல் நிற்பாய் !"

எனவுரைத்த தலைவிக்குத் தலைவ ணங்கி
ஏகிவிட்டேன் ! என்சபதம் பூர்த்தி யாகிக்
கனவுகளும் நனவாகும் கால மன்றோ ?
கடுநஞ்சை ஒருகலத்தில் கலந்து வந்து
மனமறியக் கணவனுக்குத் துரோகம் செய்த
மானமற்ற தலைவிக்குத் தந்தேன், வீழ்ந்தாள் !
இனமறியாச் சிறுமதியோன் திகைத்து நிற்க
எதிர்நின்று யாரென்று கூறலானேன் !

வஞ்சனையால் உடல்முழுதும் நஞ்சு கொண்டோன்
வஞ்சியெனைத் தாக்கிவிட்டு நழுவப் பார்த்தான் !
'கொஞ்சுமொழி மாதர்நலங் கொத்தித் தின்னுங்
கொடும்பாம்பைக் கொல்வதனால் கெடுத லில்லை !
அஞ்சிமனம் நடுங்குவது வீண்தான் !' என்றே,
ஆண்குலத்தின் களங்கத்தைத் குத்திச் சாய்த்தேன் ;
வெஞ்சிறையில் அரசாங்கம் அடைத்த போதும்
விம்மவில்லை ; நிம்மதியாய் வாழ்கின் றேனே !

மனத் திமிர்

" அன்போடு பண்பார்ந்த நண்பா, இங்கே
அண்மையிலே நடந்தவொரு செய்தி சொல்வேன் !

என்போலும் மனத்திமிரை அடக்க வொண்ணுர்
எவரேனும் இருப்பாரோ? தெரிவிப் பாய்நீ !

தன்போக்கில் கழிந்துவந்த எனது வாழ்வில்
சரிபங்கை எவளுக்கும் தரம றுத்துப்

பொன்போன்ற இளமைதனைக் கொன்றேன் வீணில்,
புதுமையொன்று நேருமென அறிந்தி டாமல் !

கதியாக நம்பிவந்த பணிம னைக்குக்
கையச்சுப் பொறியியக்கும் அலுவல் பார்க்கப்

புதிதாக நியமித்த ஒருபெண் ணுக்குப்
புதிராக நானிருந்தேன் ! அவள்கேள் விக்குப்

பதிலாக ஒன்றிரண்டு மொழிவ தன்றிப்
பாவைமுகம் ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை ;

மதியாமல் இருக்கின்றேன் எனநி னைத்து
மற்றெவரும் இல்லாத வேளை ஒன்றில்.....

'தினையளவும் அன்பில்லா இதயங் கொண்டோர்
சிறுமியெனை வேலைக்கேன் சேர்த்துக் கொண்டீர் ?

பனையளவு வளர்ந்திருந்தும் பணிபு ரிந்தும்
பயனென்ன ? சம்பளத்தால் வருமோ இன்பம் ?

மனைவிளக்காய், மனஅமைதி தரும்ம ருந்தாய்,
மனைவியெனும் நிலையளித்தால் வாழ்வேன் ; இன்றேல்,

நினைவிழக்கும் ஓரேவழியாய் உயிர்து றப்பேன் !
நிதானித்துப் பதில்தருக'' என்றாள், சென்றாள் !

வற்புறுத்திக் காதலிக்கச் செய்த மங்கை
வாழ்வுக்குத் துணையானாள் ! மகிழ்ச்சி யோடு

கற்புநிலை காப்பாற்றிக், கணவன் என்னைக்
கண்போலப் பேணுகின்றாள் ; அளிக்கும் இன்பம்

சொற்பமில்லை ; கணநேரம் காணாவிட்டால்
சோர்ந்திடுவாள் ; என்மீதில் உயிரே வைத்தாள் !

தற்பெருமை பேசவில்லை ; அவள்மேல் நானும்
தணியாத ஆசையுடன் இருந்து வந்தேன் !

அந்நிலையில் என்மனைவி ஆற்றி வந்த
அலுவலுக்குப் பதிலாளை அமர்த்தும் போது
முன் நிலையை எண்ணியொரு முரண்பாடான
முறைகண்டேன் ; கரியநிறம் ; அழகேயில்லை ;
தன்னிலைமை தவறாத தையல் என்ற
தகுதிபெற்ற குணவதியைத் தேர்ந்தெடுத்தேன் !
நன்னிலையில் சின்னாட்கள் நகர்ந்த பின்னர்.....
நஞ்சனைய காமத்தீ நெஞ்சில் தோன்றிப்

பெருநெருப்பாய் முண்டெரியப், பித்தம் முற்றிப்,
பெண்வெறிதான் கண்மறைக்க, உள்ளங் கெட்டுக்
கருவறுக்க இயலாத விரக நோயால்
கன்னியவள் கரம்பற்றிச் சேரம் செய்தேன் !
அருவெறுப்பால் முகஞ்சுளித்தாள் ; கூச்சலிட்டால்
அலுவலகம் நகைக்குமென அடக்க மாக
ஒருமுறைப்பால் உள்ளத்தை உணர்த்தி விட்டே
ஓதுங்கினளே ! மனத்திமிரை ஒடுக்கி னளே !''

துரைக்கண்ணம்மாள்

எங்களது சிற்றூரில் பள்ளிக் கூடம்
இல்லாத பெருங்குறையைத் தீர்க்க வேண்டி

எங்கிருந்து வந்தாளோ துரைக்கண்ணம்மாள் ?
எப்படியோ குழந்தைகளை ஈர்த்துக் கொண்டாள் !

செங்கதிரோன் கீழ்த்திசையில் உதித்தால் போதும்—
சிறுவரெல்லாம் களிப்போடு பள்ளி செல்வார் !

" தங்கமுனை மங்கையிவள் மதலை கட்குத்
தக்கதொரு வழிகாட்டி யாவாள் " என்று

பெற்றோர்கள் புகழ்ந்துரைத்துப் பேணி வந்தார் !
பின்னடைந்த மக்களுக்குத் தொண்டு செய்யக்,

கற்றோரும் கனதனத்தை உற்றோ ரெல்லாம்
கருதாத நிலைகண்ட துரைக்கண்ணம்மாள்,

அற்றோர்க்குப் புத்துணர்வை ஊட்டி வந்தாள் !
அதனால்தான் அவ்வூரில் " அம்மா " என்றால்

மற்றோரைக் குறிக்காமல், அம்மை யாரை
மட்டுந்தான் குறிக்கின்ற சிறப்பும் பெற்றாள்.

இந்நிலையில் பக்கத்துச் சிற்றூர் தன்னில்
இரத்தினம்மாள் என்கின்ற இசையில் வல்லாள்—

தன்னிசையை உலகுக்குக் காட்டி வாழத்
தகுந்தவொரு நல்வாய்ப்பு நேர்ந்திடாமல்

என்னசெய்வ தென்றேங்கி இருத்தல் கண்டே
எமதருமைப் பள்ளிக்கே இட்டு வந்து,

தன்னைவிட அறிவினிலே இளையர் வேனும்—
தலைவணங்கும் உயர்வளித்துத், துரைக்கண் ணம்மாள்

"குயில்மொழியாள் பாடுகின்றாள், கேளீர்!" என்று
கூட்டத்தைக் குறைவின்றிச் சேர்த்து வைத்துப்—

பயிலுகின்ற மாணவர்க்கும், பண்டி தர்க்கும்,
பாமரர்க்கும் பயனளிக்கும் இசையாம் என்றும்;

துயிலுகின்ற மோழைகட்கும் ஊக்கத் தோடு
துவளாத உறுதிதரும் மருந்தாம் என்றும்;

மயிலிறகால் புகழ்பெற்ற சமணர் போல—
மதிப்புரையால் செல்வாக்கைப் பெற்றுத் தந்தாள்!

தனக்கெந்தக் குறைவரினுந் தாங்கிக் கொண்டு,
தன்தங்கை தயாநிதியின் துணையும் சேர,
மனக்கவலை ஏற்பட்டால் இரத்தி னம்மாள்
மகிழ்ச்சிக்குத் தடைவருமென் றச்சத் தாலே
நினைக்கவொணாப் பெரும்பொருளை ஈட்டித் தந்தாள்!
நிலைமையிலே ஏழ்மையினால் தாழ்ந்தி ருந்தும்
தனக்கெனவே வாழாத தகைமை மிக்காள்;
தன்மானங் காப்பதொன்றே உயர்வாயக் கொண்டாள்.

வானத்தை முட்டுகின்ற மாடங் கொண்ட
மாளிகையின் உரியவராம் சீமா னோடு
நாணத்தை விட்டுவிட்டு நத்தச் சென்று
நன்றிதனைக் கொன்றுவிட்ட இரத்தி னம்மாள் —
மானத்தை உயிரைவிடப் பெரிதாயக் காக்கும்
மறப்பெண்ணாம் துரைக்கண்ணின் குடும்பத் தாரை
ஈனத்தைக் கற்பித்துத் தாழ்த்தப் பார்த்தாள்;
ஏற்பதற்கு மக்களில்லை; என்ன செய்வாள்?

"மாற்றுரின் ஏச்செல்லாம் மலர்ச்செண் டாகும் ;
வளர்கின்ற நற்பயிருக் கெருவு மாகும் ;
தூற்றிடுவோர் தாம்எனக்கு மெய்யாய் நல்ல
துணைசெய்வோர் ; அவரில்லை என்றால் இங்கே
ஆற்றுகின்ற தொண்டுக்கு மதிப்பே யில்லை ;
அரும்பண்பை மற்றவர்கள் அறிவ தற்கும்
ஏற்றதொரு வாய்ப்பாகும் : இதனால் எல்லாம்
எள்ளளவும் பின்வாங்கி ஓய மாட்டேன் !

நன்றிதனை மறப்பவர்கள் வாழ்க ! நம்மை
நாநடுங்க வசைபொழிவோர் வாழ்க ! நேற்றுச்
சென்றதனை நினையாதோர் வாழ்க ! நாளைச்
சிறப்புகளை மதியாதோர் வாழ்க ! என்றும்
இன்றிருக்கும் நல்லபெயர் வாழ்க ! எங்கள்
எதனையுமே தாங்குகின்ற இதயம் வாழ்ந்தால்,
குன்றிலிட்ட விளக்கான எமது கொள்கை
குறைவின்றி ஈடேறும் விரைவில் !" என்று

கூறுகின்ற பெருந்தகையாள் தூரைக்கண் ணம்மாள்
குறுஞ்சிரிப்பைக் காண்பவர்கள் வியக்கின் றார்கள் !

வீறுகொண்ட இளைஞரது படையைக் கொண்டு
விடுதலைக்கு முரசறையும் நாளை நோக்கி

ஏறுநடை போடுகின்றாள் ; இடறு கின்ற
எத்தனையோ சிறுகல்லும் முள்ளுங் கண்டு

மாறுபடா உளத்திண்மை வரப்பெற்றாள்
வாழ்க்கையிலே வெல்வதற்கும் ஐய முண்டோ ?

அவ்வளவே ; இரத்தினம்மாள் பொறுமை நெஞ்சம்
அடைந்திட்டாள் ; அங்கிருந்தும் அகன்று விட்டாள் !

எவ்வளவோ சர்க்கரையை இட்டால் கூட
இனிக்காதாம் எட்டிக்காய் ; அதேதே போன்றாள் !

இவ்வளவாம் உதவிகளும் எண்ணி டாமல்—
யார்யாரோ விழிகாட்டி அழைத்தா ரென்று

செவ்வையுடன் சிந்தித்துப் பார்த்தி டாமல்—
சென்றிட்டாள் ; கற்றிழந்தாள் ; சிறுமை பெற்றாள் !

செல்வமும் சுகவாழ்வும்

சுமுதாவின் மேனிநிறங் கருப்பா னாலும்
குறையில்லா வெள்ளைமனம் ! தங்கை யானை
அமுதாவோ அழகரசி எனினும், மிக்க
அழுக்காறும், அடக்கமிலாச் செருக்கும் கொண்டாள்
சமுதாயக் கோட்பாட்டிற் கிணங்க இந்தச்
சகோதரியர் திருமணத்தை முடித்து வைத்தே,
அமுதுநிகர் இல்வாழ்க்கை அனுப விக்க
அனுப்பிவிட்டார் பெற்றவர்கள் ஆசி கூறி !

அக்காவின் கணவன்ஓர் ஏழை ; தன்னை
அரசாங்க ஊழியத்தில் அர்ப்ப ணித்துத்
தக்கானாய், மனைவிமக்கள் தம்மைத் தாங்கும்
சான்றோனாய் அமைதியுடன் விளங்கி வாழ்ந்தான் !
இக்கால முற்போக்கின் எடுத்துக் காட்டாய்
இலங்கிநின்ற சிறியவனின் செல்வக் கோமான்
துய்க்காத பொருளில்லை ; துன்பம் சற்றும்
தொடராத பெருவாழ்வில் திளைத்து வந்தான் !

தங்கையிட்ட அழைப்பேற்றுத் தனியே சென்று,
தணியாத வியப்பினிலே தவித்தாள் மூத்தாள் !
அங்கிருந்த அணிமணிகள் பட்டுச் சேலை
அடுக்கடுக்காய் வைரநகை வெள்ளிச் சாமான்—

'எங்கிருந்து குவித்திட்டார் இந்தச் செல்வம் ?
எப்படித்தான் வசதிகளைச் சேர்த்தார் ?' என்று

தங்கையிடம் கேட்டறியத் தேடும் போது—
தனியறையில் வழக்கறிஞர் ஒருவ ரோடு

சொல்லுகின்று சொற்கேட்டுச் சுருண்டு போனாள் !
'துணைவருக்குத் தங்கையிடம் தொடர்பே யில்லை !

எல்லையிலாப் பொருள்திரட்டக் கள்ளத் தோணி
ஏராளம் வைத்திருந்தார் ! அரசாங் கத்தார்,

தொல்லைதரும் இவர்குழுவைப் பிடிப்ப தற்குத்
துப்பாக்கிப் படையினரை ஏவி யுள்ளார் !

சொல்லாமல் புறப்பட்டாள் குமுதா, 'இந்தச்
சுகவாழ்வு (!) யாருக்கு வேண்டும் ?' என்று.

காவிரியின் புதுப்புனலில் ஆட எண்ணிக்
கமலத்தை அழைத்தவுடன் ஒத்துக் கொண்டாள்.
"தீவிரமாய்ப் போய்வருவோம் ; அப்பா வுக்குத்
தெரியாமல் புறப்படுவோம் !" என்றாள் ; சென்றாம் ;

பூவிரிந்து மணம்பரவா அரும்பு போன்றாள்,
பொன்னிக்குத் துணைபோக எண்ணித் தானே
தாவியிழுத் தணைத்திட்ட வெள்ளத் தோடு
தான்மூழ்கி, ஆழ்கடலை நோக்கிப் போனாள் ?

தலைமகனை ஈன்றெடுக்கத் தந்தை வீட்டில்
தங்கவந்து, தங்கைதனைப் பறிகொ டுத்த
நிலைமையினை நினைந்துமிக நெஞ்சம் சோர்ந்தேன் !
நிலைகுன்றித் தடுமாறிப், பதறி வீழ்ந்தேன் !

அலைபரவும் நதிநோக்கி அலறிப் பார்த்தேன் !
அப்பாவுக் கென்னசொல்வேன் ? ஐயோ, தீர்ந்தேன் !
கொலைபுரியுங் கொடுமைக்கா குளிக்க வந்தேன் ?
கொண்டவருங் குடிகேடி என்பார் ; அந்தோ !

திண்ணையிலே அமர்ந்திருந்தார் தந்தை ; கையில்
சிறியதொரு கடிதவுரை ; முகத்தில் சோகம்!

எண்ணத்தை எங்கேயோ பதித்து விட்டே
ஏதுமற்ற வெறுவெளியைப் பார்த்திருந்தார்!

"கண்ணுன என்கமலம் மண்ணுய்ப் போனுள்—
காரணமும் நானேதான், அப்பா!" என்றே,

எண்ணெயில்லாத் திரிபோலக் கருகி நின்றேன்.
"எதனையுமே தாங்குகின்ற இதயம் வேண்டும்!

துன்பத்தை வெல்வதில்தான் இன்பம், கண்ணே ;
துளியேனும் சிதருதே! துடை, உன் கண்ணை!

அன்பெல்லாம் கவர்ந்தவொரு பொருளி ழந்தால்—
அப்பேரது நிதானந்தான் அருமருந்தாம்!

உன்கணவர் ஒளியழகன் மாரடைப்பால்
உயிர்நீத்தார் ; தந்தியிதோ ; உட்கார்!" என்றார்.

என்கடமை நாளெல்லாம் கண்கள் சிந்தும்
எல்லையிலா வெள்ளத்தில் மூழ்கல் தானே?



"இன்றொருநாள் காவலுக்குச் செல்லா விட்டால்
என்னமச்சான், குடிமுழுகிப் போய்விட மாதே!

கொன்றுவிடும் தென்றலுடன் கொடுமை செய்யக்
குளிர்நிலவுங் கூடிவந்தால் தாங்கு வேனோ?"

என்றவள்தன் வாய்திறந்து கேட்க வில்லை!
இருவிழியில் ஏக்கத்தைத் தேக்கி வைத்து,

மென்றுமிழ்ந்த வெற்றிலையால் சிவந்து நிற்கும்
மெல்லிதழைப் பற்களினால் கடித்துக் கொண்டே

ஏற்றிவைத்த கைவிளக்கை எடுத்துத் தந்தே
ஏதுமறி யாதவள்போல் முகத்தைப் பார்த்தாள்!

ஊற்றிவைத்த கஞ்சியுடன் ஊறு காயும்
உண்டுவிட்டுத் தலையில்மேல் துண்டைக் கட்டிப்

போற்றிவைத்த ஆளுயரத் தடியைத் தூக்கிப்
போர்வீரன் நடைபோட்ட பொன்ன னுக்கு

மாற்றிவைத்துப் பதிலுரைக்க மார்க்க மில்லை;
மனம்வெதும்பித் தினம்புரியும் பணிக்குச் சென்றான்.

கடமையிலே எள்முனையும் வழுவ மாட்டான் ;
கள்வருக்குப் பொன்னனென்றால் கலக்கங் கொள்ளும்
உடலொடிய விழியுமட்டும் காவல் காப்பான்
ஒருமணிநெல் களத்தைவிட்டுப் போகா வண்ணம் !
மடமயிலான் செல்லிக்குத் தாலி கட்டி
மாதமொன்று சென்றதுதான் மிச்சம் ; ஆனால்
உடல்விரும்பும் இன்பத்தை ஒருநாள் கூட
ஊடலுடன் கூடி, அவன் தந்ததில்லை !

களத்தினிலே உலவிநின்று பொன்னன் நெஞ்சைக்
கட்டழகி விட்டகண்ணீர் சுட்ட தாலே,
உளத்தினிலே போராட்டம் ஓய வில்லை !
உட்கார்ந்தான் ; எழுந்திருந்தான் ! உன்மத் தன்போல்
குளத்தருகே போய்நீரில் குனிந்து பார்த்தான் ;
குடிசையிலே இதயத்தின் குமுறல் தாங்கி
இனைத்திருக்கும் மனைவிநிலை எண்ணும் போதில்
எல்லாமே துச்சமெனத் துணிந்து விட்டான் !

"செல்லி, செல்லி! திற, கதவை!" என்று கூறித்
திடுதிடெனக் கதவிடிக்கும் ஓசை கேட்டு,
நல்லதொரு கனவுலகில் சஞ்சரித்த
நங்கையிகத் திடுக்கிட்டாள், விழித்தெழுந்தே!
"இல்லையில்லை! செல்லி, உன்னை இனிமேல் என்றும்
இராப்பொழுதில் தனித்திருக்க விடவே மாட்டேன்..."
சொல்லியதைத் துணைவனவன் முடிப்ப தற்குள்
தோள்மீது கிளிபோலத் தொற்றிக் கொண்டாள்.

திகைத்தறியாப் பேரின்பக் கடலில் மூழ்கித்
தினந்தினமும் புதுப்புதிதாய்த் திகழும் அன்பால்
உளத்தோடும் உளம்ஒன்றி, உணர்வு மங்கி
உலகதிலை மறந்திருவர் ஒருவர் ஆனார்!
களைத்துப்போய் உறங்கிவிட்ட செல்லி காதில்
கதவருகில் ஒலிகேட்கத் திறந்து பார்த்தாள்;
களத்துநெல்லைக் கள்வர்கள் கவர்ந்த தாலே—
காவலனைக் கைதுசெய்ய மூவர் நின்றார்!

நல்லூரி வாழ்க்கையெனில் கவலை காணுக்
கரனையர்கள் மலிந்திருக்கும் இக்கா லத்தில்—

எல்லாரும் போலன்றி முத்து வேலன்
ஏட்டுடனே நாட்டுநிலை பயின்றான் ! செல்வம்

இல்லாதார் ஏக்கமுடன், கல்லார் துன்பம்;
ஏராள சாதிமத பேதம் போக்க

நல்லோர்கள் சிந்திக்கும் வழியில் சென்று,
நலிவுதனைக் களைவதற்கு முயல வேண்டும்

என்கின்ற முடிவோடு வெளியில் வந்தான்,
இளங்கலைஞன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு !

தன்குடும்பம் ஏழ்மையினால் தவித்துங் கூடத்
தன்னலத்தை உதறிவிட்டான் ! அலுவல் வாய்ப்பு

நன்கிருந்தும் நாடவில்லை ! நாடு முற்றும்
நள்ளிரவில், நண்பகலில் சுற்றிச் சுற்றி,

" என்குறிக்கோள் கதியற்றோர் உயர்வே !" என்றான் ;
எளியோரின் மனங்கவர்ந்த தோழன் ஆனான் !

முத்துவேலன் தாய்வழியில் மாமன் என்னும்
முறையுடைய செல்வந்தர் ஒருவ ருண்டு !

பத்துலட்சம் மதிப்புடைய வீடு ; பேரடிப்
பக்கத்தில் ஏலக்காய்த் தோட்டம் ; இந்தச்

சொத்துசுகம் அத்தனைக்கும் உரிமை பெற்ற
சுந்தரியாம் பெண்ணொருத்தி அவருக் குண்டு !

கொத்துமலர் விரிந்ததுபோல் அழகென் றாலும்—
குறைவில்லாத் தலைக்கனமும் செருக்கும் கொண்டாள் !

படித்திருந்த காரணத்தால், ஏழை யென்றும்
பாராமல் இருவருக்கும் திரும ணத்தை

முடித்துவிட்டார் ! ஏலி-தவளை சுயிலொன் றாலே
முடிந்துகொண்டே உறவுபூண்ட கதையைப் போல !

அடித்தளத்தில் பெரும்பிளவாய் வெடித்தி ருக்கும்
அவரிருவர் முரண்பாட்டை உணர்ந்தி டாமல்,

குடித்தனமும் தனியாக வைத்து விட்டார்,
குடும்பமிக ஒழுங்குடனே இயங்கு மென்று !

பொதுநலமே பெரிதென்று கருதி வாழ்வோன்
புகழ்மலையின் உச்சியிலே நிற்கும் இந்தப்
புதுநிலைமை புரியாத தெனினும், அஃதோர்
புனிதமிகும் பணியென்ப துணர்ந்து பின்னர்
இதுசரியென் றெண்ணுத மனையாள் தன்னால்
எவ்வாறு நல்வாழ்வு நுகரக் கூடும்?
மெதுவாகக் கணவனுடன் உறவை விட்டாள்
மேன்மைதரும் நன்மதிப்பைக் குறைத்துக் கொண்டாள்!

எதிர்பார்த்த தென்பதனால் ஏமா றாமல்
எப்போதும் போற்பணியைத் தொடர்ந்து செய்தான்.
கதிர்காட்டும் வெப்பத்தைத் கிளையில் தாங்கிக்
கருமேகத் திரளைகுளிர் மழையாய் மாற்றும்
முதிராத தேக்குமரக் காடு சூழ்ந்த
முதுகுன்றின் மீதிருக்கும் தேக்கடிக்கு
நிதிசேர்க்கச் சென்றுவிட்டுத் திரும்புங் காலை
நிலைதவறி வண்டியுடன் கவிழ்ந்து, கீழே

சரிவுதனில் உருண்டுவீழ்ந்தான் ; சாக வில்லை,
தப்பிவிட்டான், என்றாலும் நிறையக் காயம் !

அருவிதனைப் பார்ப்பதற்குப் போயி ருந்தோர்
அலறியோடித் தூக்கிவந்து, சிகிச்சைக் காகப்

பரிவுடனே மதுரைநகர் கொண்டு சென்று,
பரபரப்பாய் மருத்துமனை சேர்த்து விட்டுப்

பிரிவுதரும் துன்பத்தால் வருந்து மென்று
பிழைத்தவனின் மனைவிக்குச் செய்தி தந்தார் !

சுந்தரியோ துணைவனது விபத்தைக் கேட்டுச்
சோகத்தால் சுருண்டுவிழ வில்லை ! அங்கே

வந்தவரும் தூரத்துச் சொந்தம் போல
மனங்குலையா தமர்ந்திருந்தாள் ஆண வத்தால் !

'எந்தலைவர் விரைந்துநலம் பெறுக !' என்போர்
எண்ணற்றோர் வாழ்த்திநின்றார் இரும ருங்கும்,

வெந்துயரில் வீழ்ந்தவனும் விழித்துப் பார்த்தான் ;
வேதனைதான் அதிகரிக்க விழிகள் சோர்ந்தான் !

பொதுநலமே பெரிதென்று கருதி வாழ்வோன்
புகழ்மலையின் உச்சியிலே நிற்கும் இந்தப்
புதுநிலைமை புரியாத தெனினும், ஆங்கோர்
புனிதமிகும் பணியென்ப துணர்ந்து பின்னர்
இதுசரியென் றெண்ணாத மனையாள் தன்னால்
எவ்வாறு நல்வாழ்வு நுகரக் கூடும்?
மெதுவாகக் கணவனுடன் உறவை விட்டாள்
மேன்மைதரும் நன்மதிப்பைக் குறைத்துக் கொண்டாள்!

எதிர்பார்த்த தென்பதனால் ஏமா ராமல்
எப்போதும் போற்பணியைத் தொடர்ந்து செய்தான்.
கதிர்காட்டும் வெப்பத்தைத் கிளையில் தாங்கிக்
கருமேகத் திரளைகுளிர் மழையாய் மாற்றும்
முதிராத தேக்குமரக் காடு சூழ்ந்த
முதுகுன்றின் மீதிருக்கும் தேக்க டிக்கு
நிதிசேர்க்கச் சென்றுவிட்டுத் திரும்புங் காலை
நிலைதவறி வண்டியுடன் கவிழ்ந்து, கீழே

சரிவுதனில் உருண்டுவீழ்ந்தான் ; சாக வில்லை,
தப்பிவிட்டான், என்றாலும் நிறையக் காயம் !

அருவிதனைப் பார்ப்பதற்குப் போயி ருந்தோர்
அலறியோடித் தூக்கிவந்து, சிகிச்சைக் காகப்

பரிவுடனே மதுரைநகர் கொண்டு சென்று,
பரபரப்பாய் மருத்துமனை சேர்த்து விட்டுப்

பிரிவுதருந் துன்பத்தால் வருந்து மென்று
பிழைத்தவனின் மனைவிக்குச் செய்தி தந்தார் !

சுந்தரியோ துணைவனது விபத்தைக் கேட்டுச்
சோகத்தால் சுருண்டுவிழ வில்லை ! அங்கே

வந்தவரும் தூரத்துச் சொந்தம் போல
மனங்குலையா தமர்ந்திருந்தாள் ஆண வத்தால் !

'எந்தலைவர் விரைந்துநலம் பெறுக !' என்போர்
எண்ணற்றோர் வாழ்த்திநின்றார் இரும ருங்கும்,

வெந்துயரில் வீழ்ந்தவனும் விழித்துப் பார்த்தான் ;
வேதனைதான் அதிகரிக்க விழிகள் சோர்ந்தான் !

தூய்மைமிகும் வெண்மையுடைச் செவிலியர்கள்
சுறுசுறுப்பாய் ஓய்வின்றி ஓடி ஓடித்
தாய்மைநலந் தவழ்கின்ற நகைமுகத்தில்
சங்கடமோ அரிருவெறுப்போ காட்டாமல்,
நோய்முதலை நன்கறிந்து மருந்து தந்து,
நோயாளர் துயர்குறைய இனிது பேசும்
வாய்மைதனைச் சுந்தரிதான் நாளுங் கண்டு
வாழ்க்கையிலே முதன்முறையாய்க் கண்ணீர் விட்டாள்!

நெற்றியிலே வெம்மையுடன் துளிகள் வீழ,
நிமிர்ந்துபார்த்த முத்துவேலன் கரத்தைப் பற்றிக்,
"குற்றமெல்லாம் பொருத்தருள்வீர், அத்தான்! நீங்கள்
குணக்குன்றம்! நான்கொடிய பள்ளத் தாக்கு!
சற்றுமினி உமைப்பிரிய மாட்டேன்! இந்தச்
சமுதாயம் வாழ்வதெனில் சேர்ந்தே சாவோம்!
உற்றதுயர் ஒழிந்ததத்தான், உயர்வோம்!" என்றாள்;
"உலகத்தை வென்றுவிட்டேன்!" என்றெழுந்தான்.

"என்ன அண்ணு, ஆலைச்சங்(கு) ஊதவில்லை?
ஏதேனும் இயந்திரத்தில் பழுதோ?" என்று
பொன்னம்மாள் எதிர்வீட்டில் குடியிருக்கும்
புலியரசைக் கேட்டவளாய் வெளியே வந்தாள்.

"இன்னுந்தான் தெரியாதா உனக்குச் சேதி?
இருளப்பன் சொல்லவில்லை? எங்கே போனான்?
சொன்னமொழி தவறிவிட்டார் ஆலைச் செல்வர்;
தொழிலாளர் பொறுமைநிலை கடந்து விட்டோம்!

அன்றாடம் பாடுபட்டும், பசியால் வாடி
அணுவணுவாய்ச் சாவதினும், அல்லல் தீர்க்க
ஒன்றாகக் கிளர்ந்தெழுந்து, மகிழ்ச்சி யோடும்
உரிமைக்குப் போராடி மடிவோம் என்று,
குன்றாத புகழ்படைத்த உழைப்போர் கூட்டம்
குணக்கேடர் பரம்பரைக்குக் கொள்கை சொன்னோம்!
இன்றுமுதல் வேலைக்குச் செல்வ தில்லை;
எத்தனைநாள் ஆனாலும் பரவா யில்லை!

இறுதியிலே வெற்றியெல்லாம் நீதிக் குத்தான் !
எங்கவிலே கருங்காலி எவரு மில்லை !

அறுதியிட்டுக் கூறிடுவேன் இதனை !'' என்று
ஆவேசச் சொற்பெருக்கை முடிக்க லானான்—

உறுதியினைப் பாராட்டிப் பொன்னம் மாள், தன்
உயிரனையான் போனஇடம் அறியா ளாகித்

'தறுதலைகள் பேச்சுக்குச் செவியைச் சாய்த்துத்
தன்னினத்தார் வாழ்வுக்குத் துரோகம் செய்தால்.....

என்னசெய்வேன் ?'' எனக்கவன்றாள். இரவுப் போதில்
எங்கிருந்தோ இருளப்பன் மெல்ல வந்தான் !

''பொன்னம்மா ! இனிஎனக்குப் பெரிய வேலை ;
புரிகிறதா ?'' எனச்சிரித்தான் ; சீறிப் பாய்ந்தாள் ;

''சொன்னதை நான் புரிந்துகொண்டேன் ! மானங் கெட்ட
துரோகிக்கு மனையாளாய் வாழ மாட்டேன் !

முன்னேநீ வெளியேசெல் முகத்தை மூடி ;
முழுவேலை நிறுத்தத்தான் இங்கே!'' என்றாள்,



வேட்டையிலே விருப்பமுள்ள நரக நாதர்
விலையுயர்ந்த துப்பாக்கி வைத்திருந்தார்.

காட்டில்போய் புலி, சிறுத்தை சுடவா? இல்லை!
கதியற்ற மான், முயல்கள் சுடுவார்; மேலே

கூட்டத்துப் பறவைகளைக் கொல்வார்; நன்கு
குறிபார்த்துச் சுடுவதற்கும் அறியார்! ஊரில்

போட்டியிடும் மாற்றாரை மிரட்டு தற்கும்.
பொருளையெலாம் காப்பதற்கும் உதவு மன்றோ?

விடியுமுன்னர் எழுந்தொருநாள் "வீரா!" என்றான்.
மேல்துண்டை இடுப்பின்மேல் கட்டிக் கொண்டே

அடிபணிந்து தொழுதெழுந்து மெய்க்காப் பாளன்
ஐயாவின் ஆணைஎதிர் நோக்கி நின்றான்;

"துடியெடுத்துத் தா!" எனவே தந்தான்; "இன்று
தாமதமோ? புறப்படலாம்!" என்றார்; போர்க்குக்

கொடியுயர்த்திப் படைநடத்தும் வீரன் போலக்
கொலைக்கருவி தோள்சுமந்திப் பின்னே சென்றான்!

குளக்கரையில் இருவருமே சென்று நின்றார் ;
"கொக்குகளில் இரண்டொன்று சுடலாம் !" என்றார்,
விளக்கமுறப் பொழுதின்னும் புலர வில்லை ;
வெண்ணிறமாய் மறுகரையில் ஏதோ தோன்ற,
'மளக்' கென்று துப்பாக்கி வாங்கிச் சுட்டார் ;
மறுகணமே 'ஐயய்யோ !' என்று காதைப்
பிளக்கின்ற ஒலிகேட்டுத் திகைப்ப டைந்து,
'பிடிமிதை' யென் றுதறிவிட்டுச் சென்றார் அங்கே ;

செங்குருதி வெள்ளத்தில் மிதந்த வாறு
சிறுமழலைச் செல்வமொன்று சிதைந்து வீழ்ந்தே
அங்கமெலாந் துடிதுடிக்கும் காட்சி கண்டார் ;
"அடடா, என் ஆள்செய்த வேலை யைப்பார் !
அங்கிருந்தே கொக்கென்று நினைத்துச் சுட்டான்
அப்போதே நான் தடுத்தேன் ; வேண்டா மென்றேன் !
எங்கேயான் பேச்சையெலாங் கேட்கின் றார்கள் ?
இப்போது கொலைகாரன் ஆனான் !" என்றார்.

அப்போதே தான்வந்து சேர்ந்த வீரன்
ஐயரவின் வஞ்சகச்சொல் காதில் கேட்டுத்
"தப்பேதும் என்பேரில் இல்லை!" என்றான்;
தறுதலையே! நானுபொய் சொல்லு கின்றேன்?
துப்பாக்கி தூக்கியதால் துரையாய் விட்டாய்!
துணிச்சலுடன் கொலைபுரிந்தாய்; தூதூ, வெட்கம்!
இப்போதே காவலரைக் கொண்டு வந்திவ்
விழிமகனைச் சிறைக்குள்ளே தள்ளு கின்றேன்!"

என்றுரைத்துச் சென்றுவிட்டார் நாக நாதர்-
ஏழையின்சொல் அம்பலத்தில் ஏறு தன்றோ?
ஒன்றிரண்டு நாட்களிலே பணியாள் வீரன்
ஒன்பதாண்டுச் சிறைவாசம் பரிசாய்ப் பெற்றான்!
கொன்றுவிட்ட உத்தமரோ ஊரார் மெச்சக்
குழந்தையினை இழந்தோர்க்குப் பொருளைத் தந்தார்
என்றும்போல் வேட்டைக்குக் கிளம்பி விட்டார்;
இன்னொருவன் துப்பாக்கி தூக்கி வந்தான்!



எது மானம்!

மணமாகிப் புதுமனைவி தனது வீடு
வரக்கண்ட மணவாளன் மகிழ்தல் போலக்
கணமேனும் ஓயாமல் பெருகி ஓடும்
காவிரியின் வெள்ளத்தால் களிப்புக் கொண்டு,
குணமேவும் நல்லுழவர் குதித்தெழுந்து,
குணதிசையில் உதிக்கின்ற கதிரை வாழ்த்தித்
துணையான காளைகளை ஏரில் பூட்டித்
தொடங்கிவிட்டார் தம்தொழிலை உலகம் வாழ !

"பொன்னப்பா ! பண்ணையிலே ஆலுவல் பார்க்கப்
புதிதாக வந்திருக்கும் கணக்குப் பிள்ளை,
என்னப்பா, எப்போதும் திண்ணைப் பக்கம்
இருப்பதில்லை ? வேறென்ன வேலை செய்வார் ?
உன்னைப்போய்க் கேட்டால்தான் உண்மை யெல்லாம்
உள்ளபடி தெரியு" மென்றான், கண்சி மிட்டி,
முன்னேரை ஓட்டிவந்த முத்தன் என்பான் !
முகங்கவிழ்ந்து பொன்னையன் மெதுவாய்ச் சொன்னான்

"சின்னய்யா மனைவிக்குச் சொந்தம் என்று
சிபாரிசின்மேல் வேலைக்கு வந்தான் ; பின்னர்

சின்னய்யா இல்லாத வேளை யெல்லாம்
சின்னம்மாள் அருகினிலே வட்டமிட்டான் ;

என்னய்யா இதிலுள்ள புதுமை யென்றால்...,
இருவருமே காதலராம் வெகுநாள் முன்பே !

சின்னய்யா பணத்தின்மேல் ஆசை யாலே
செய்துகொண்ட ஏற்பாடாம் ! தெரிந்த பின்பு,

மானத்தை மதிக்கின்ற (!) நமது சீமான்
'மரியாதை கரைந்திடுமே அயலார் கேட்டால் ;

ஈனத்தைப் புரிந்தவனே, வெளியே போடா !'
என்றவனைக் கழுத்துரைக்க, அம்மாள் வந்தே

'ஏனத்தான் வீண்கூச்சல் போடு கின்றீர் ?
யாருக்குக் கேவலமென் றெண்ணி னீரா ?

ஞானத்தால் சிந்திப்பீர் ! நடப்ப தெல்லாம்
நன்மைக்கே ; வீட்டுக்குள் அடங்கிப் போகும்'

என்றுரைக்க, நமதய்யா பெட்டிப் பாம்பாய்
இருந்துவிட்டார் மௌனமாக! இதுதான் முத்தா,
இன்றிருக்கும் பணக்கார நாக ரீகம்!
இந்நேரம் இந்நிலைமை எனக்கு நேர்ந்தால்
கொன்றிருப்பேன் இருவரையும் ஒன்றாய்ச் சேர்த்துக்;
குருடனாகக் கண்ணிருந்தும் வாழ மாட்டேன்!
குன்றளவு பொருள்குவித்துப் பயன்தான் என்ன!
குன்றிமணி அளவேனும் மானம் வேண்டாம்?"

அடுக்களையின் ஆதரவில் கணக்குப் பிள்ளை
அய்யாவைத் துச்சமெனக் கருத லானான்;
தடுக்கவொரு வழியில்லாப் பண்ணை யாரும்
தமக்குள்ளே புழுக்கத்தைச் சகித்துக் கொண்டு,
மிடுக்குடனே வாழ்வதுபோல் காட்டி வந்தார்!
வெளியார்க்கு நிலைமையெலாந் தெரிந்துங் கூடத்
துடுக்கோடு பேசுதற்குத் துணிவே யின்றித்
தொந்தரவு நமக்கேனென் றிருந்து விட்டார்!

மனமொவ்வா மனைவியுடன் ஒன்றாய் வீட்டில்
வாழ்வதிலே கசப்படைந்த பண்ணை யாரும்

தினமெழுந்து வயல்வெளிக்குச் செல்வார் ; அங்கே
சேரிமக்கள் உழைக்கின்ற சிறப்பைக் காண்பார் ;

கனவினிலும் உயர்வாழ்வைக் காணா மாந்தர்
கவலையின்றித் திரிவதிலே வியப்புக் கொள்வார் ;

இனமொத்த பைங்கிளிபோல் கணவர் உண்ண
இளமகளிர் கஞ்சிகொண்டு வருதல் பார்த்து,

விம்முகின்ற மனத்தினிலே பொறாமை மூள
வேறெவரும் அறியாமல் மறைத்துக் கொள்வார் !

இம்முறையில் சிலநாட்கள் ஓடிப் போக.....
ஏரோட்டும் பொன்னப்பன் மனைவி யான

பொம்மியென்பாள், பொங்கிவரும் இளமை யின்பப்
பூரிப்பில் செழித்திருக்கும் எழிலார் மங்கை,

செம்மையுறக் கொழுநனையே பேணி வந்தாள்
சீமானின் விழிவலையில் சிக்கி விட்டாள் !

செல்வத்தால் ஆகாத செயலும் உண்டோ ?
சேரிப்பெண், வஞ்சகத்தை அறிந்திடாமல்
செல்வந்தர் வலைக்குள்ளே வசமாய் வீழ்ந்தாள் !
தீதறியாப் பொன்னப்பன் கழனி சென்றால்,
நல்வகையில் நேரத்தைப் பயன்படுத்தி,
நாசத்தை, மோசத்தை அணைத்துக் கொண்டாள் !
அல்வகையில் கூடிடுவோர் செய்தி யெல்லாம்
அம்பலத்தில் வந்துவிழ நாளா ஆகும் ?

ஆமையென அடங்கிவாழ்ந்த பொன்னப் பன்தான்
அறிந்தவுடன் விரைந்தோடி வீட்டில் பார்த்தான் ;
தீமையெனும் புரியாள்போல் உறங்கிக் கொண்டே
" சின்னய்யா, என் உயிரே நீங்கள் !" என்றாள்
ஊமையென இருந்தவாறே ஏய்த்த கள்ளி !!
ஓங்கிவிட்ட கொடுவாளால் உயிர்கு டித்தே,
சீமையிலே தான்மட்டும் மானங் காத்த
திருப்தியுடன் பொன்னப்பன் சரண டைந்தான் !



இயல் 3

ஆனந்தம்

கவிதைகள்

உள்ளே.....

- யார் குடை ?
- ஒய்வு கிடைத்தது !
- கடிதமும், பதிலும்.
- எதற்கு விளம்பரம் ?
- புது மயக்கம் !

மழைக் குடை

சிற்றுண்டி விடுதிக்குள் சென்ற நேரம்
சிறுதூறல் பெருமழையாய் மாறிப் பெய்யச்

சற்றங்கே தாமதிக்கும் சாக்கில், மூன்று
சரக்குகளை வயிற்றுக்குள் இறக்கி விட்டுப்,

பற்றெழுதும் புத்தகத்தில் பத்த ஞவைப்
பதினொன்றும் பக்கத்தில் பதியச் செய்து,

மற்றவர்போல் மறக்காமல், எதிரில் நின்று
மழைதாங்கும் குடைவிரித்துக் கிளம்பும் போது—

"மன்னியுங்கள், வருகின்றேன் நானும்!" என்று
வாயிலுள்ள பல்முழுதுந் தெரியக் காட்டி

அன்னியர்போல் என்னெதிரில் அமர்ந்திருந்த
ஆறடிக்கு குறைவில்லா உருவம் ஒன்று

தன்னுடலை என்குடைக்கீழ் நுழைத்துக் கொண்டு
தானும்உடன் வரலானார், தடுப்பதற்குள்!

"என்னமழை! என்னமழை!! அய்யா, நீங்கள்
எதுவரையில்?" எனத்தொடர்ந்தார், எரிச்சல் கொண்டேன்.

"அறவழியார் பேட்டைவரை" என்றேன்! "நானும்
அங்கேதான்" என்றாரே! "என்ன, போங்கள்!

மறதியினால் மழைநாளில் பிறத்தி யாரை
வருத்துகிறோம் என்கின்ற உணர்வில் லாத

பிறவிகளும் மனிதரெனப் பேசலாமா?
பெரியவரே, சொல்லுங்கள்!" என்றேன்." ஆகா!

திறமையுடன் பேசுகின்றீர்; பரவா யில்லை!
சிறுஉதவி செய்வதனால் தீதா? என்றார்.

எப்படித்தான் உணர்த்திடுவேன்? இன்னும் இந்த
இழிசெயலை இடித்துரைக்க யாது செய்வேன்?

அப்பப்பா! என்வீடு சேர்ந்தேன்! தொல்லை
அகன்றதென மகிழ்வாக உள்ளே சென்றேன்!

தப்பினேனா? "அய்யா என் குடையைத் தந்தால்
சரி" யென்று வழித்துணையும் பின்னே வந்தார்!

அப்போதே என்குடையை வீட்டில் கண்டேன்!
அய்யய்யோ, குற்றவாளி நானே தானா?

காட்டூரின் பணிமனைக்கு மாற்றலாகிக்
கணக்காக ஓராண்டு கழித்துங் கூட,

வீட்டில்பேரய் மனைவிமக்கள் முகத்தைக் கண்டு
மீள்வதற்கும் ஓய்வுபெறுச் சங்கரய்யர

ஏட்டினிலே எழுத்தினிலே மனம்வைக் காமல்
என்னதான் மார்க்கமென எண்ணி எண்ணிக்...

கோட்டையினைப் பிடித்தவர்போல் குதித்தெ ழுந்து,
குறும்பாகப் புன்னகையை அரும்ப விட்டார்!

அடுத்ததினம் முதல்தேதி ஆகை யாலே
அமைதியுடன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு,

கடுத்தமுகம் காட்டாமல் கனிவாய்ப் பேசிக்
கடைகார முள்மீதே கண்ணுய் நின்றார்.

தொடுத்துவிட்ட அம்புபோலத் தந்திக் காரர்
துடிப்போடு சங்கரய்யர பேரைச் சொல்லி

எடுத்தளித்த உறைபிரித்துப் பார்த்தார்; "பாட்டி
இறந்துவிட்டாள், உடன்வருக அடக்கம் செய்ய!"

மகளைத் தந்தியினால் பத்து நாட்கள்
மனமார மேலாளர் ஓய்வு தந்தார்!

அங்கனிக்குப் புறப்பட்டார் சங்கரய்யர்;
'அவசரமேன்? பொய்த்தந்தி தானே' என்று,

முகஞ்சுளிக்கும் மனைவிக்குப் புடைவை, தாய்க்கு
முழுவெள்ளைச் சேலை, மற்றும் தின்பண்டங்கள்,

சுகமளிக்கும் கடைச்சரக்கு யாவும் வாங்கிச்,
சுவைபொருகத் திரைப்படமும் பார்த்து விட்டு...

நள்ளிரவில் பெள்ளவந்து வீடு சேர்ந்து
நயமாக மனையாளை அழைத்த போது—

"உள்ளபடி உங்களன்னை மரண்ட செய்தி
உங்களுக்குத் தெரியாதா? ஓய்வு வேண்டிக்

கள்ளமுறை கையாண்டு, தாய்முகத்தைத்
காணாமல் ஏமாந்து கோட்டை விட்டீர்!

கொள்ளிவைக்கப் பின்னவராக் குறையி னாலே
குழந்தைதான் கருமங்கள் செய்தான்!" என்றாள்.

அவன் :

"ஓவியமே! ஆவிதனை எடுத்துச் சென்றாய்;
ஒருதிங்கள் ஆயிற்றே, என்ன செய்தாய்?

கூவியழும் நெஞ்சத்தால் நடைப்பி ணம்போல்
குமைகின்றேன்; பதிலெங்கே? ஏனோ மௌனம்?

தாவிவரும் எதிர்ப்புகளைத் தடுத்து விட்டுத்,
தந்தையிடம் சம்மதத்தைப் பெறுவ தாக

நாவினிக்க நவின்றாயே, ஒப்பி னாரா?
நடந்தவற்றை எழுதிடுவாய்! அதற்குள் இங்கே

முந்தாநாள் என்தந்தை வரைந்த வாறு
முதியவராய் ஒருவரெனைப் பார்க்க வந்தார்;

எந்தவொரு மந்திக்குத் துணைவ ஆக
எனைப்பிடிக்க வந்தவரோ தெரிய வில்லை!

அந்தோ! நான் செய்தவொரு தந்தி ரத்தை
அறியாராய் மனம் வருந்தித் திரும்பி விட்டார்!

செந்தேனைப் பட்டியிலே வைத்துக் கொண்டு
தேர்ந்தநல்ல குடிகாரன் போல்நடித்தேன்!"

அவள் !

" அய்யய்யோ ! நண்பரே, நீர் மோசம் போனீர் !
அறிவித்துத் தொலைக்காமல் இதையேன் செய்தீர் ?

பொய்யுறவாய்ப் போனதினி நமது காதல்—
புழுதியிலே சிந்தியபால் என்ன ஆகும் ?

மெய்யுணர்வால் நாமிருவர் ஒன்று பட்ட
மேன்மைதனைத் தந்தையிடம் எடுத்துச் சொல்லி,

அய்யமெலாம் அகற்றி, உங்கள் அப்பா வையும்
அணுகி, அவர் அனுமதியைப் பெற்றுக் கொண்டு,

தங்களையும் நேராகக் கண்ட பின்னர்
தடைவிருந்தால் மறுத்திடலாம் என்றேன், அப்பா

தங்கமென நம்பிவந்த கருத்தை யெல்லாம்
தகர்த்தெறிந்து தரைமட்ட மாக்கி விட்டார் !

இங்கெனக்கும் எதிர்வீட்டுப் பையனுக்கும்
ஏழாம்நாள் திருமணமாம் ; குறித்து விட்டார் !

உங்களுக்கும் அழைப்புவரும் ; ஆரா யாமல்
உயர்வாழ்வைக் கெடுத்தவரே, வாழ்த்த வாரீர் !"

எதற்கு விளம்பரம்

மிகப்பெரிய மாளிகையின் முகப்பின் முன்னே
மெய்யழகர், ஆசனத்தில் சாய்ந்த வாறு,

'சுகப்படவா, துயர்ப்படவா சொத்துச் சேர்த்தேனம்?
துணையில்லாத் தனியாளாய்த் துடித்து நிற்கத்,

தகப்பனுடன் தாயாரும் இழந்த பேரன்
தனக்குதவ வில்லை!' என நினைக்கும் போழ்தில்—

திகைப்படையும் விதத்திலவர் எதிரில் வந்து,
திடுமெனவோர் இளமங்கை வணங்கி நின்றாள்!

"பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்தேன்; உங்கள்
பக்கத்தில் எப்போதும் உடனிருந்து

சித்திரமாய்ப் பணிபுரிவேன்: அந்த ரங்கச்
செயலாளர் பதவிக்குத் தகுந்த வள் நான்!

எத்தனைபேர் வந்தாலும் ஒதுக்கி, ஏழை
என்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்!" என்றாள்.

சித்தமிகக் களிப்படையக் கிழவர், "உள்ளே
சென்றிடுவோம், வருக!" எனப் பரிவு காட்டி,

அழைத்துப்போய்க் கட்டிலின்மேல் அமரச் செய்தே
அருந்துதற்குக் குளிர்பானம் தந்து, சொன்னார் :—

" உழைத்துழைத்துத் தேய்வாளன் செல்வ மெல்லாம்
ஊதாரிப் பேரனுக்குத் தருவ தில்லை ;

பிழைத்திருக்க வழியற்று நாடு கத்தில்
பித்தாக அலைகின்றான், தெரிவாய் டும் ; நீ

தழைத்திருக்க வழிசொல்வேன் —தயக்க மின்றித்
தலையசைத்தால் நிலைஉயரும், சரியா ?" என்று

வாய்ச்சொல்லை அவ்வளவில் முடித்து விட்டு.....
வயோதிகரும் வாலிபராய்த் தன்னை எண்ணிக்

காய்ச்சலினால் உளறுகின்ற தேரையா என்போல்
கரகரத்த குரலாலே குழறிக் கொண்டு,

பூச்சொரியும் தலைப்பின்னல் சுழற்றிப் பற்றிப்
பொறுமையின்றி இழுத்துவிட்டார் ! என்ன விந்தை !

பேய்ச்சிரிப்பால் அதிர்ச்சியுற்றுத் திரும்பிப் பார்த்தார்..
பெண்ணில்லை ! பேரன்தான் நின்றான் அங்கே !

புது மயக்கம்

"மைத்துனரே! உமதருமைத் தங்கை செய்த
மகத்தான செயலொன்று சொல்வேன், கேட்பீர்!
பைத்தியமோ இவளுக்கென் றெண்ணு கின்றேன்!
பரிகாரம் மிகவிரைவில் தேட வேண்டும்!
வைத்தியமும் இருக்கிறதோ தெரிய வில்லை;
மணமான உடன்வரும்இம் மயக்கந் தீர!
கைத்திறனைக் காட்டிவிட்ட கதையைக் கேட்டுக்
கைகொட்டிச் சிரிக்காதீர்!" எனத்தொ டர்ந்தேன்!

"வீட்டருகே கட்டிவைத்த பசுவின் கன்றை
விடுத்தவுடன் வழக்கம்போல் அவிழ்த்துச் சென்றே
ஊட்டவிட்டுப் பால்கறக்கப் போன தங்கம்
ஓடிவந்தாள் தலைதெறிக்க, தேற்றுக் காலை!
தோட்டத்தில் நிகழ்ந்ததென்ன என்று பார்த்தால்.....
தொழுவத்தில் பசு இல்லை; வண்டிக் காளை
மாட்டடத்தில் பால்கறக்கச் சென்றதாலே,
வரங்கிவந்தாள் இரண்டு உதை முழங்கால் மீது!"

முடியவில்லை.....உள்ளிருந்து வந்தாள் பாய்ந்து !
" முடியவில்லை ! இவர்கதையும் கேள், கேள் ; அண்ணா !

விடியவில்லை ; இருள்பிரியா நேரத்தில்நான்
வேறுநினைப்பேராடிருந்தேன், தவறு செய்தேன் !

மடியவில்லை மணமயக்கம் இவருக்கின்னும்
மாதங்கள் மூன்றாகிக் கூட !" என்றாள்,

கொடியவில்லைப் புருவமாகக் கொண்ட தங்கம் ;
கூரம்பு விழியாலே குத்திக் கொன்றாள் !

" மாட்டுக்குப் பருத்திவிதை ஊற வைத்து,
மறுபுறத்தில் இருக்கின்ற பழைய சோற்றைப்

பொட்டுண்ணச் சொன்னதற்குப், பருத்திக் கொட்டை
பூராவும் தின்றொழித்த கார ணத்தைக்

கேட்டுச்சொல் ! மயக்கத்தின் விளைவு தானா ?
கிண்டலுக்குச் செய்தாரா, கிறுக்கா ?" என்றாள் !

" பாட்டுக்குத் தாளம்போல் புதுவாழ் வுக்குப்
பண்பிதுதான் !" என்றிட்டார் அன்பு மச்சான்.